வணிகம்
VANIHAM

கலை, வர்த்தகம்

சிறப்பிதழ்

இதழ்

5

வர்த்தக இதழ் ... G. INSTITUTE ...

விலை :-

4/50

வெளியீடு:
கே. ஜீ'ஸ். இன்ஸ்ரிரியூட் – நல்லூர்.

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் முதன் முதல்

G. C. E. (A/L)

மாணவர்களது புதிய பாடத்திட்டத்திற்கமைய
மெய்யியற்துறைப் பட்டதாரிகளினுல் வெளியிடப்பட்ட சிறந்த நூல்

குறியீட்டு அளவையியல்

SYMBOLIC LOGIC

ஆக்கம்:

K T. இராசரத்தினம் *B. A. (Hons)*

S. லிங்கசாமிசர்மா *B. A. (Hons)*

இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும்.

சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு.

V. P. P. *யில் பெறவிரும்புவோர் 3/50 முத்திரையுடன் தொடர்புகொள்க*

பிரதி ரூபா: 11-75

Director
K. G's. INSTITUTE
113, Point Pedro Road,
Nallur - Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகம்

VANIHAM மாதசஞ்சிகை

கலை — வர்த்தகம்

மலர்: 1 இதழ்: 5

சித்திரை - 1982

சஞ்சிகை ஆசிரியர்:-
கு. குணசிங்கம்
B. Com. (Sp. Hons)

உதவி ஆசிரியர்:-
அ. சண்முகதாசன்

நிர்வாக ஆசிரியர்:-
ஐ. பரமானந்தம்

— ஆக்கங்களின் கருத்துக்கு ஆக்க கருத்தாளர்களே பொறுப்பாவர். —

எதற்காக?

சித்திரை மாதம் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர் மத்தியில் முத்திரையாகப் பதிந்தகாலம் ஏனெனில் சித்திரை என்றால் பரீட்சையைத் தவிர வேறு எந்த நினைவும் முன்பு வருவதில்லை. புத்தாண்டைக்கூட கொண்டாடுகின்ற நாட்டம் இன்றி புத்தகங்களுடன் காலத்தை ஓட்டுகின்ற மாதம் அது. மாணவர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கிய மாதமாக அது இருந்தது. ஒரு சில மாணவர் மத்தியில் வைராக்கியத்தையும், வேறு சில மாணவர் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்திய மாதமாக இருந்தது சித்திரை. சித்திரை மாணவர் மத்தியில் ஒரு முத்திரையாக இருந்தது என்பதுடன் அவர்களது எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிப்பதால் தவிர்க்க முடியாததாயும் இருந்தது.

இச் சிறப்பிதழ் சித்திரைச் சிறப்பிதழாக வெளிவருவதன் காரணம் அந்த சித்திரைக்கு ஒரு நினைவு முத்திரையாக அமையவேண்டும் என்பதற்காகும்.

ஆ—ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் சிறப்பிதழாக வெளிவருவதால்

வணிகம் 3-ம், 4-ம் இதழ்களில்

வெளிவந்த போட்டி முடிவுகள், தொடர்கட்டுரைகளின்
மிகுதிப்பாகங்கள் யாவும்
வைகாசி இதழில் வெளிவரும்.

ஆ - ர்.

சிறப்பாகச் சில வார்த்தைகள்!

வணிகம்

இதழ்களுக்கு 1981 மார்கழி முதல் விடயதானங்களை வழங்கிச் சிறப்பித்த

கட்டுரை ஆசிரியர்கள்

திரு. T N. செல்வகுமார் B. A. (Hons)
திரு. S. லிங்கசாமிசர்மா B. A. (Hons)
திரு. K. T. இராசரத்தினம் B. A. (Hons)
திரு. M. அனந்தேஸ்வரன் B. Ed. (Hons)
திரு. S. புவனேந்திரராசா B Com. (Sp. Hons)
திரு. S. வேலாயுதபிள்ளை B. A. (Hons)
திரு. வித்துவான் க. சின்னத்தம்பி
திரு. சி, வரதராஜன் B A. (Hons)
திரு. பூ. சோதிநாதன் B Com. (Sp. Hons)
திரு. N. கிருஷ்ணானந்தன் B. A. (Hons)
திரு. அ. மு. வேலாயுதபிள்ளை B. D. S.

ஆகிய அனைவருக்கும், போட்டிகளில் பங்குபற்றிய, பரிசு பெற்ற அனைவருக்கும், நேரிலும், தபாலிலும் அறிவுரை வழங்கிய அனைவருக்கும், சந்தாதாரர்களுக்கும், விளம்பரம் தந்துதவியவர்களுக்கும், வணிகத்தை தவறாது பெற்றுப்பயன்பெறும் மாணவர்கள் அனைவருக்கும் தனது மகிழ்வைத் தெரிவித்துக்கொள்கின்றது.

ஆ - ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல்

நகராக்கம்

அ. மு. வேலாயுதபிள்ளை *B. D. S.*

கைத்தொழில் வளர்ச்சி காரணமாக நகராக்கங்களும் வளர்ச்சியடையத் தொடங்கியது. பெரும்பாலும் கைத்தொழில் புரட்சிக்குப் பின்புதான் நகராக்கம் வளர்ச்சி அடைந்தாலும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் அதன் பங்கானது கூடுதலாகவுள்ளது. சில நாடுகளில் சனத்தொகையின் அடிப்படையிலும் நகராக்கமானது வளர்ச்சிஅடைகின்றது. இலங்கையில் அண்மைக்காலத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் கீழ் நகராக்கமானது மேற்கொள்ளப்படுகின்றது அரசியல் கலைபீடுகள் காரணமாகவும் நகராக்கமானது வேறுபடுகிறது இதனால் நாடுகளிடையே நகராக்க வரையறையும் வேறுபடுகின்றது.

காலத்தினை அடிப்படையாகக்கொண்டு நகராக்க வளர்ச்சியினையும் இரண்டுபிரிவாக பிரித்து அறியலாம்.

1. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நகராக்கம்
2. அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் நகராக்கம்

கைத்தொழில் புரட்சிக்குப்பின் உண்டான நகராக்கம் அல்லது அபிவிருத்தி அடைந்த

நாடுகளின் நகராக்கம்

கைத்தொழில் புரட்சிக்குப் பின் நகராக்க செயன்முறை பொருளாதார அமைப்பில் உண்டான அடிப்படை மாற்றத்தினாலேயே ஏற்பட்டது விவசாயப் பொருளாதார அமைப்பில் இருந்து கைத்தொழில் பொருளாதார அமைப்புக்கு மாற்றப்பட்டதனாலேயே நகராக்கம் ஏற்பட்டது. கைத்தொழில் புரட்சியினால் கிராமப்புறங்களில் பெருமளவிற்கு வரி விதிக்கப்பட்டதனால் பெருந்தொகையான இளைஞர்கள் வேலைவாய்ப்பை இழந்தனர். இதனால் கைத்தொழிற்சாலைகளில் வேலைசெய்வதற்கு பெருந்தொகையானோர் இடம் பெயர்ந்தனர். இத்தகைய நகராக்கமானது மேற்கு ஐரோப்பாவில் கூடுதலாக உள்ளமையால் மக்களும் இடம் பெயர்ந்தனர். இவ்வாறு உண்டான நகராக்கத்தினை இழுவிசை நகராக்கம் என்பர். இதனால் நகரப்புறங்களில் குடித்தொகையானது வேகமாக அதிகரிக்க கைத்தொழிற்சாலைகளும் அதிகரித்தன. இதனால் பெரும்பாலானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. இத்தகைய நகராக்க வளர்ச்சி பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்பட்டதாகும்,

மேற்கு ஐரோப்பியநாடுகளில் தொழில் நுட்ப துறையில் உண்டான மாற்றங்களினாலும் நகராக்கம் வளர்ச்சியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்பத்துறையின் விருத்தியில் மின்சாரம், குழாய் நீர், தொலைபேசி, போக்குவரத்து, செய்தித்தொடர்பு, போன்ற பல துறைகளில் பெரு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இதனால் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து வரக்கூடிய மக்களைத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் ஐரோப்பிய நகரங்களுக்கு ஏற்பட்டன.

இக்காலப் பகுதியில் கட்டட அமைப்பில் உண்டான மாற்றங்களும் இந்நகராக்கத்தினை கூட்டியதெனலாம். இதுவரைகாலமும்கிடையாக வளர்ந்த கட்டடங்கள் கைத்தொழில் புரட்சியின் பின் வான்நோக்கி வளரத் தொடங்கின. இதனால் கிராமப் புறங்களிலிருந்து வரக் கூடிய மக்களைத் தாங்கிக் கொள்ளக் கூடிய வல்லமை நகராக்கங்களுக்கு ஏற்பட்டன, அத்துடன்பல ஐரோப்பிய நாடுகளுக்கு ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் குடியேற்றங்களாக இருந்தன. இக் குடியேற்ற நாடுகள் ஐரோப்பிய காலனித்துவ நாடுகளுக்கு உணவைக் கொடுக்கும் பகுதிகளாகக் காணப்பட்டன. இதனால் ஐரோப்பாவில் கிராமங்களில் உள்ள மக்கள் உணவு உற்பத்தியில் கட்டாயமாக ஈடுபட வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. இதனால் ஐரோப்பாவில் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் கவர்ச்சி மிக்க நகரங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இதனாலும் நகராக்கமானது வளர்ச்சியடைந்து ஐரோப்பாக்கண்டத்தில் காணப்பட்ட பொருளாதார விருத்தியும் நகராக்கத்தை ஊக்குவிக்க ஒரு காரணியாக அமைந்தது. இக்காலப் பகுதியில் கீழைத்தேச நாடுகளிலிருந்த செல்வம் ஐரோப்பிய நகரங்களில் குவிந்தன. இதனைப் பயன்படுத்தி கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கான வசதியையும் நகரப்புறங்களையும் விஸ்தரிக்கக்கூடியதாக இருந்தது.

எனவே ஐரோப்பிய நாடுகளில் உண்டான நகராக்க செயன்முறை அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது உண்மையான நகராக்கம் ஏற்பட வேண்டுமானால் பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றம் அவசியமானால் விவசாயத்துறையில் இருந்து பெருந்தொகையானோர் கைத்தொழில் துறைக்கு மாற்றப்பட வேண்டும் ஐரோப்பாவில் உள்ள ஏனைய நாடுகளில் 1950-ம் ஆண்டுக்குப்பின் நகராக்கமானது வளர்ச்சி அடையத்தொடங்கியது ஆனால் பிரான்சில் நகராக்கமானது குறைவாக இருந்தது. இவ்வாறு இருப்பதற்கு காரணம் பிரான்சில் இக்காலப்பகுதிகளில் ஏறத்தாழ 60 வீத மானவர்கள் விவசாயத்துறையில் தங்கி இருந்தகாகும். இன்று நகராக்க வளர்ச்சியானது இங்கிலாந்து 80 வீதம், ஜேர்மனி 80 வீதம், ஐக்கிய அமெரிக்கா 79வீதம் கனடா 75 வீதம் ஆகக்காணப் படுகின்றது.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் நகராக்கம்

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளாக ஆசிய, ஆபிரிக்கா, லத்தீன்அமெரிக்க நாடுகள் பல காணப்படுகின்றன. இந்நாடுகளில் பொருளாதார அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றத்தினால் நகராக்கமானது வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போல் நகராக்கமானது வளர்ச்சியடைய முடியாமைக்கு பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் தங்கி இருப்பதே காரணமாகும்.

கிராமப்புறப் பிரச்சனைகள் காரணமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் நகராக்கமானது ஏற்பட்டு வருகின்றது. கிராமப்புறங்களில் கொடிய நோய், போக்குவரத்துக் கஷ்டம், கல்வி வசதிக் குறைவு என்பவற்றினால் பெரும்பாலான மக்கள் நகரப்புறங்களை நோக்கி இடம்பெயர்கின்றனர். மக்கள் தொடர்ந்தும் நகரப்புறங்களை நோக்கி இடம்பெயர்வதினால் இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகராக்கத்தினை தன்னூவிசை நகராக்கம் என்பர்.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் சாதிப்பிரச்சனையாலும் நகராக்கமானது ஏற்பட்டு வருகிறது அன்னியர் ஆட்சியின் கீழ் பெருமளவுக்கு சாதிக்கட்டுப்பாடுகளை தளர்த்தப்பட்டன. ஆனால் கிராமப் புறங்களில் சாதிக்கட்டுப்பாடுகள் நிலைத்து நிற்கின்றன. இத்தகைய பிரச்சனையை விரும்பாத மக்கள் நகரப்புறங்களை நோக்கி இடம்பெயர்வதால் நகரத்தில் மக்கள் தொகை அதிகரித்து நகராக்கமானது விரிவடைகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகரங்களின் கவர்ச்சியும் கிராமப்புறங்களை கவர்கின்றது இத்தகைய கவர்ச்சியானது பல கோணங்களில் கிராம மக்களை கவர்ந்துள்ளது. பொழுதுபோக்கு அம்சங்கள், நூலக வசதி, கல்வி வசதி, போக்குவரத்து வசதிகள் என்பன காரணமாக நகரப்புறங்களில் வாழவேண்டுமென்ற தூண்டுதலினால் பெருந்தொகையானோர் இடம்பெயர நகராக்கமும் வலுப் பெற்றது.

தற்காலத்தில் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் நகராக்கமானது வளர்ச்சியடைந்துள்ளது. பாகிஸ்தானில், இஸ்லாமாபாத்தும் பிரேசிலில் பிறேசிலியா என்ற நகரமும் இலங்கையில் மினிப்பே, அநுராதபுரம் என்பனவும் திட்டமிட்ட அடிப்படையில் வளர்ந்து வருகின்ற நகரங்களாக உள்ளன. திட்டமிடப்பட்ட இந் நகரங்களில் மக்கள் வாழ்க்கைக் கேற்ப வசதிகள் திட்டமிடப்பட்டுசெய்துகொடுக்கப்படுவதனால்பிற்போக்கான பகுதிகளில் உள்ளவர்களும் இந் நகரங்களை நோக்கி இடம் பெயர்கின்றனர்.

குடியேற்ற நாடுகளாக இருந்த காலத்தில் மக்கள் மேலைத்தேச கல்வி வசதியையும் பெற்றுக்கொண்டனர். இத்தகைய கல்விக் கூடங்கள் நகரங்களில் அமைக்கப்பட்டன. அக்கல்விக் கூடங்களில் கல்வி கற்றவர்கள் அவ் அவ் நாடுகளின் தேசியத் தலைவர்களாகவும் அரசியல், பெருளாதார, விஞ்ஞான துறைகளில் சிறந்து விளங்கியவர்களாகவும் வந்துள்ளனர். எனவே அக்கல்விக்கூடங்களில் கல்வி கற்றுத் தாங்களும் உயர் நிலைக்கு வரவேண்டும் என்ற காரணத்தினாலும் மக்கள் நகரப்புறங்களை நோக்கி இடம்பெயர நகராக்கமும் வளர்ச்சியடைந்தது.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்தியினாலும் அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் நகராக்கமானது ஏற்பட்டது இந்நாடுகளில் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை நடைபெறும்பலநகரங்களில் மக்கள் வாழும் தொகையும் அதிகரித்தது இலங்கையில் கம்பளை, நாவலப்பிட்டி, கற்றன் பகுதிகளில் இத்தகைய நகராக்கமானது வளர்ச்சியடைந்தது.

வர்த்தக விருத்தியாலும் நகராக்கமானது வளர்ச்சியடையத் தொடங்கியது. நகரங்களில் உள்ள வர்த்தக வாய்ப்புக்காரணமாக கிராம மக்கள் நகரப்புறங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். பம்பாய், சங்காய், கொழும்பு போன்ற பகுதிகள் வர்த்தக விருத்தியின் காரணமாக வளர்ச்சியடையத் தொடங்கின.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் துறைமுகங்கள் சேர்ந்த நகரங்களும் வளர்ச்சியடையத் தொடங்கின. கொழும்பு றையோடிஜெனரோ, கெய்ரோ, பம்பாய், ஆகிய பகுதிகளின் வளர்ச்சிக்கு துறைமுகமே காரணம் எனக் கூறலாம். மேற்கு ஐரோப்பிய ஆட்சியாளர்கள் வெளிநாட்டு வர்த்தக வாய்ப்புக் கருதி துறைமுகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்து குடியிருப்புக்களையும், வர்த்தக நடவடிக்கைகளையும் வைத்துக் கொண்டதினால் பெருந் தொகையான நகரங்கள் கூட துறைமுகங்களைச் சார்ந்தே தோன்றின. நகர ஆய்வாளர் ஜெஜனவீட், M. டெஸ்டமணட் என்பவருடைய கணிப்பீட்டின்படி 1940-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை துறைமுக சனத்தொகை 72வீதமாகஇருந்து52வீதமாக வீழ்ச்சியடைந்தது எனக் கூறுகிறார்கள். அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் 24 வீதத்திற்கு, 20 வீதமான நகராக்கமானது காணப்படுகின்றது.

நகராக்கத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகள்

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பு வேகத்திற்கு ஏற்ப நகராக்கமானது வளர்ச்சியடையவில்லை. இதனால் இந்நாடுகளில் 2 வகையான பிரச்சினைகள் தோன்றியுள்ளன நகராக்கத்தினால் உண்டாகின்ற முக்கிய பிரச்சனை வீட்டுப் பிரச்சினை ஆகும். நகரத்துக்கு மக்கள் செல்லும் வேகத்திற்கு ஏற்ப வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படாமையால் மக்கள் பொருத்தமற்ற வீடுகளிலும் வீதியோரங்களிலும் வாழ்கின்றனர். டச்சுக்காரரினால் இந்தோசினாவின் தலைநகராக யகற்தா தீர்மானிக்கப்பட்ட போது 6 லட்சம் மக்கள் வசிக்கக்கூடிய முறையில் அந்நகரம் அமைக்கப்பட்டது. ஆனால் இன்று சனத்தொகை 60 லட்சத்தையும் தாண்டிவிட்டது, அங்கு சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப வீடுகள் அதிகரிக்கப்படாமையால் வீட்டுப்பிரச்சினை ஏற்பட்டது.

நகராக்கத்தினால் ஏற்பட்ட முக்கிய பிரச்சினை சேரி வாழ்க்கையாகும். இத்தகைய பிரச்சினை அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலும் தோன்றியுள்ளது. உலகத்தின் மொத்த சனத்தொகையில் அதாவது 100 கோடி மக்கள் சேரிவாழ்க்கையை நடாத்துகின்றனர். நகரப்புறங்களில்காணிப் பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை, தொழில் வாய்ப்பின்மை வருமானக்குறைவு, போன்றவற்றால் சேரிவாழ்க்கை நடாத்துவோர் தொகை கூடியுள்ளது. லத்தின் அமெரிக்கா நாடுகளில் 15 லட்சத்திற்கும் மேற்பட்டோரும் ஆசியாவில் 10 இலட்சத்துக்கு மேற்பட்டோரும் சேரிவாழ்க்கை முறையில் வாழ்ந்தனர். சேரிவாழ்க்கை தொற்றுநோய்கள், சமூக விரோதச் செயல்கள், போக்குவரத்து, நெருக்கள் போன்றவற்றுக்கும் காரணமாகின்றது.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கின்றது, இவற்றை மாற்ற வேண்டுமானால் பொருளாதார அமைப்புக்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அதிகரித்துச் செல்லும் குடித்தொகைக்கு ஏற்ப கைத்தொழில் சாலைகள் காணப்படாததனால் வேலைவாய்ப்பு வழங்க முடியாதுள்ளது. இப் பிரச்சினையை நீக்க வேண்டுமானால் நகரப் புறங்களில் தொழில் வாய்ப்பை அதிகரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

சமூக விரோதக் குற்றச் செயல்களின் அதிகரிப்பும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள நகரங்களிலும் கூடி வருகின்றது. இதற்குப் பிரதான காரணம் வேலைவாய்ப்பும், வீட்டுவசதிகளும் அதிகரிக்கப்படாமையேயாகும். வீட்டு வசதிகள் அதிகரிக்கப்படாததினால் வீதிகளைத் தங்கள் வாசஸ்தலமாக மாற்றிய சிறுவர்கள், துர்ப்பழக்கங்களில் ஈடுபடவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படாமையால் இளைஞர்கள் விரத்தி மனப்பான்மையாலும் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் வேகமாக அதிகரித்துவரும் நகராக்கத்துக்கு இனக்கலவரமும் பாகுபாடும் காரணமாக இருந்துள்ளன. இந்நாடுகளின் நகராக்கத்திற்கேற்ப நகரவளர்ச்சி ஏற்படாததால் நகர்ப்புறங்களில் உள்ள வறிய நிலையில் உள்ளவர்கள் இனரீதியிலேயே தங்கள் பிரச்சினைகளை அணுக முற்படுகின்றார்கள். பம்பாயில் சிவசேனை இயக்கம் தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக நடத்திய தீவிரவாத நடவடிக்கைகளும் பிரச்சாரமும் இதனையே காட்டுகிறது, அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் இனரீதியான பிரச்சனைகளும் காணப்படுவதினால் நகரப்பிரச்சனையையும் இனரீதியில் அணுக முற்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் இனக்கலவரங்களையும் ஊழல்களையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

நகரப் புறங்களில் போக்குவரத்துப் பாதைகளின் வளர்ச்சி ஏற்படாத காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. கல்லூரிகளில் மாணவர்களுக்கான அனுமதி பெறுவதிலும் இந்நாடுகளின் நகரங்களினால் இயலாத காரியமாகவுள்ளது. சுற்றுடல் அதிகளவு மாசுபடுத்தப்படுவதினால் நோய்களும் பரவுகின்றன. அடிக்கடி நீர்த்தட்டுப்பாடும் அவற்றுடன் மின்சார வெட்டும் கூடுதலாக ஏற்படுகின்றன.

எனவே இத்தகைய பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமானால் அடிப்படைப்பொருளாதார பிரச்சனைகளில் மாற்றம் ஏற்படுவதே சிறந்ததாகும், விவசாயத்துறையை யந்திரமயமாக்குவதன் மூலமும் வாழ்க்கைச் செலவைக் குறைத்து வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதன் மூலமும் இவற்றை ஓரளவு தீர்த்துக்கொள்ளலாம்.

★

வணிகம் இதழ்கள்

1, 2, 3, 4 ஆகியவை சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசம் உண்டு. தேவைப்படுவோர் பிரதிக்கு 3-50 சதப்படி தபாற் கட்டளையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ - ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கியல்

வினா - விடை

கு. குணசிங்கம்
B. Com. (Sp. Hons)

வினா: 1.

கணக்கீட்டுக்கால உபாயம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது?

விடை:

ஒரு வியாபாரத்தின் ஆயுட்காலமானது வரையறுக்கப்பட முடியாத கால எல்லையைக் கொண்டிருப்பதாகக் கணக்கீட்டில கருதப்படுவதனால் உகந்ததமான கால அடிப்படையில் அதன் ஆயுட்காலத்தைப் பிரிக்கும் உபாயமே கணக்கீட்டுக்கால உபாயம் எனப்படும் இவ்வாறு காலத்தைப் பிரித்துக்கொள்வதனாலேயே வருமானங்களைத் திட்டவட்டமாக மதிப்பிட முடிவதுடன செலவினங்களையும் மதிப்பீடு செய்து செலவினங்களை வருவாயுடன் ஒப்பீடு செய்து இலாப நட்டத்தைத் தீர்மானிக்க முடிகின்றது.

வினா; 2

''மாறா நிலைமை'' என்பதன் பொருள் யாது?

விடை:

குறித்த ஒரு வியாபார நிறுவனம் ஒன்றின் அல்லது முழுமைக்கூறு ஒன்றின் கணக்கீட்டில் பின்பற்றப்படும் நடைமுறைகள் காலத்திற்குக் காலம் மாறுபாடற்றனவாக நிலையாக பேணப்படல் வேண்டும் என்பதாகும்.

வினா: 3

''காசு அடிப்படை'' (Cash Basis) சேர்தல் அடிப்படை (Accrual Basis) என்பவற்றினைச் சுருக்கமாக விளக்குக?

விடை:

காசு அடிப்படை எனப்படுவது ஒரு வியாபார நிறுவனத்தால் கொடுக்கல் வாங்கல்கள் சார்பில் உண்மையாகச் செலவிடப்பட்ட பணத்தொகையினை மட்டும் கணக்கீட்டில் எடுத்துக்கொள்வதாகும். சேர்தல் அடிப்படையில் குறிப்பிட்ட நிதியாண்டிற்கான செலவினங்கள் பணமாகக் கொடுத்தாலென்ன கொடுக்கா விட்டாலென்ன, வருமானங்கள் பெற்றாலென்ன பெறாவிட்டாலென்ன அந்நிதியாண்டிற்கான உண்மையான தொகை கணக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்படும். இதனாலேயே பணமாகக் கொடுபடாது நிலுவையாக உள்ள செலவுகள் அந்நிதியாண்டுக்காலத்துடன் தொடர்புடையனவாயின் இலாப நட்டக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வினா: 4

கணக்கீட்டுத் தகவல்கள் எத்தன்மை வாய்ந்தவைகளாக இருக்கவேண்டும்?

விடை:

கணக்கீட்டின் படிமுறைகளில் எடுக்கப்படக்கூடியனவாக பணப் பெறுமதியினால் அளவிட்டு விபரிக்கப்படக் கூடிய தகவல்களாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா: 5

கணக்கீட்டு முறைமை என்றால்என்ன?

விடை: நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொருட்டு கணக்கீட்டுத் தரவுகளைப் பதிவு செய்து முறைப்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய அமைப்பையும் நடைமுறைகளையுமே இது குறிக்கும்.

வினா; 6

கணக்கீட்டுத் தொழிற்பாட்டின் அடிப்படைத் தன்மைகள் யாவை?

விடை:

கொடுக்கல் வாங்கல்களைச் சாட்சிப்படுத்தும் சாதனங்களைத் தயாரித்து அவற்றிலிருந்து பேரேட்டுப் பதிவுகளை மேற்கொண்டு அக்கணக்குகளைச் சுருக்கித் தேவைப்படும் வகையில் பல்வேறு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலாகும்.

வினா; 7

ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய சொத்துக்கள் திருப்திப்படுத்தப்படவேண்டிய பொது நிபந்தனைகள் யாவை?

விடை:

பின்வரும் மூன்று நிபந்தனைகள் அவசியமானவையாகும்.

(அ) சொத்தானது வியாபாரத்தினால் உடைமை கொள்ளப்பட்டதாக அல்லது கட்டுப்படுத்தப்படுவதாக இருத்தல்வேண்டும்,

(ஆ) கணக்குகள் தயாரிக்கப்படும் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கு மேலதிகமானகாலப் பகுதியுடன் தொடர்புடையதாகவும் நிதி சார்பான கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடையதாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) அச்சொத்தானது அளவிடப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

வினா: 8

கணிய மாற்றங்களையும் கணக்கீட்டுவிலை மாற்றங்களையும் வேறுபடுத்துக?

விடை:

கணியமாற்றங்கள்(Quantitative Changes)எனப்படுபவை வளங்களின் பௌதீக ரீதியான இடமாற்றத்தால் ஏற்படுபவையாகும். இக் கணியமாற்றங்கள் வளங்களைப் பெறுவதினாலும் அவற்றைக் கொடுப்பதினாலும் ஏற்படும்.

கணக்கீட்டு விலைமாற்றங்கள் (Accounting Price Changes)செலுத்தப்பட்டவிலையில் அல்லது பெறப்பட்ட விலையில் ஏற்படும் மாற்றங்களாகும், குறிப்பிட்ட ஒரு பொருளானது இரு கால அளவில் இரு வேறு விலைகளைக் கொண்டிருக்கும் என்பது இவ்விலை மாற்றத்தினால் அறிந்து கொள்ளமுடியும்.

வினா: 9

பின்வரும் சொத்துக்களுக்குப்பொருத்தமான பெறுமானத் தேய்வு முறையினைக் குறிப்பிடுக?

(அ) நன்மதிப்பு (ஆ) இறையில் காணி
(இ) சில்லறை உபகரணங்கள் (ஈ) ஆக்கவுரிமை - வியாபாரக்குறி

விடை:

(அ) நன்மதிப்பு:- பொதுவாக நிறுவனத்தின் இலாபத்தில் குறைவு ஏற்படாவிடின் பெறுமானத்தேய்விடுவது கிடையாது. சிறந்த நிறுவனமானது குறிப்பிட்ட சில வருடங்களில் நன்மதிப்பைப்பதிவழித்து விடுவது வழக்கமாகும். பதிவழிக்கப்பட்ட தொகை வேறாகக் காட்டப்படுதல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இறையில் காணி:- இதற்குப் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்படுவதில்லை, பதிவழிக்கப்படும் தொகை வேறாகக்காட்டப் படல் வேண்டும்.

(இ) சில்லறை உபகரணங்கள்;- இவற்றுக்கு மறுபடி விலைமதித்தல் முறையில் பெறுமானத்தேய்விடுவது சிறந்ததாகும்.

(ஈ) ஆக்கவுரிமை - வியாபாரக்குறி:- இவற்றிற்கு வர்த்தக ரீதியாக வழங்கப்படும் கால அளவிலும் பார்க்கச் சட்டரீதியாக வழங்கப்படும் கால அளவு மிக நீண்டதாகக் காணப்படும் சட்டரீதியாக வழங்கப்பட்ட ஆயுள் அல்லது வர்த்தகரீதியான ஆயுள் இவற்றுள் எந்த ஆயுள் குறைந்ததோ அக் கால எல்லைக்குள் நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு ஏற்படுத்தப்படல் வேண்டும்

வினு: 10

கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தல் தொடர்பில் குறிப்பிட்ட நிதியாண்டில் பெறுமானத் தேய்வு இடப்படக்கூடிய சொத்துக்கள் சார்பில் வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள்யாவை?

விடை:

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப் படல் வேண்டும்.

(அ) பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு முறை

(ஆ) பயன்படுத்தக்கூடிய காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு வீதம்.

(இ) ஏற்பாடு செய்யப்பட்ட மொத்தப்பெறுமானத் தேய்வு,

(ஈ) பெறுமானத் தேய்விடப்படக் கூடிய சொத்தின் மொத்தத் தொகையும் அதனோடு தொடர்புடைய திரண்ட பெறுமானத் தேய்வும்.

வினு: 11

சிறுகுறிப்பெழுதுக

(அ) ஒதுக்கமும் ஒதுக்கநிதியும்.

(ஆ) ஒதுக்கமும் ஏற்பாடும்,

(இ) நிகழத்தக்க பொறுப்பு.

(ஈ) இரகசியஒதுக்கமும் மறைவொதுக்கமும்.

விடை:

(அ) ஒதுக்கமும் ஒதுக்கநிதியும்:

ஒதுக்கம் அல்லது ஒதுக்கநிதி எனப் படுவது நிறுவனத்தின் உரிமையாளரது மூலதனத் தொகைக்கு மேலதிகமாக அவருக்குச் சொந்தமாகக் காணப்படும் தொகையாகும். ஒதுக்கத்தின் அளவுக்குச் சமமான தொகை நிறுவனத்துக்கு வெளியே முதலீடு செய்யப் படுமாயின் அது ஒதுக்கநிதி எனப்படும். இவ்வாறு சிறப்பாக முதலீடு செய்யப்படாதவிடத்து அது ஒதுக்கம் எனப்படும்.

(ஆ) ஒதுக்கமும் ஏற்பாடும்:

பகிரப்படாது முன் கொண்டு சென்று பிற்காலத்தில் பகிர்வதற்கென அல்லது பாவிப்பதற்கென வைக்கப்படும் இலாபம் ஒதுக்கம் எனப்படும். இவை வரையறுத்துக் கூறப்பட்டதாயும் பொதுவானதாயும் காணப்படும், பொறுப்பு இருப்பது தெரிந்தும் அதன் தொகை திட்டவட்டமாகத்தெரியாததனல் இலாபத்திலிருந்து ஒதுக்கப்படும் தொகை ஏற்பாடாகும்.

(மிகுதியை 13 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகமும் நிதியும்

வினா - விடை

ச. புவனேந்திரராஜா
B. Com. (Sp. Hons)

தொழில் அமைப்புகள்

வினாக்கள் :

(அ) தனித் தொழிலின் நுணுக்கங்கள் எவை?

(ஆ) தனித் தொழிலைவிடக்கூட்டுத் தொழிலுக்குதேவையான சட்டங்கள் எவை?

(இ) பங்குடமைக்குஏன் தனித்துவதன்மை கிடையாது?

(ஈ) புதிதாக தாபிக்கப்பட்ட கம்பனி அமைப்பு 2 கூறி வேறுபடுத்தி காட்டுக?

(உ) கம்பனியில் ஒருவர் எவ்வாறுபங்குதாரர் ஆகலாம்?

(ஊ) அரச கம்பனிகளின் நன்மைகளை உதாரணத்துடன் விளக்குக?

(எ) சுவீகரிக்கப்பட்ட முயற்சிகளின் நிர்வாக நடைமுறைகளை கூறி 5 முக்கிய சுவிகரிப்பினை தொழிலமைப்பு ரீதியாக தொகுக்குக?

(ஏ) கூட்டுறவின் நவீன தோற்றம் என்பது எதனை?

(ஐ) கூட்டுத்தாபனங்களின் அண்மிய பாரிய மாற்றங்கள் எவை?

(ஒ) அரசினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற 5 சந்தைகளைத்தருக?

விடைகள் :

1. அ. உடனடித்தீர்மானமெடுக்கும்திறமை.

ஆ. மாற்றங்களை உடனுக்குடன் உள்வாங்கும் தன்மை

இ. சட்டத்தேவைகள் தவிர்த்து இயங்கக்கூடியதிறமை

ஈ. இலாபத் திறன் தன்மை.

உ. மறைமுக இயக்கவுண்மை.

2. அ. 1890ம் ஆண்டு பங்குடமைக்கட்டளைச் சட்டம்

ஆ. 1907 வரையறுத்த பங்குடமைக்கட்டளைச் சட்டம்

இ. 1938/47/67/78/81 கம்பனி திருத்தச் சட்டங்கள்

ஈ. மோசடி தடுப்பு கட்டளைச் சட்டம்.

உ. தொழிலாண்மைச் சட்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அ. பங்காளரை பங்குடமையில் இருந்து பிரிக்க முடியாது

ஆ. பங்குடமை இலாபம் கீழ் கொண்டு செல்லமுடியாது

இ. பங்குடமை என்று வழக்கு தொடர முடியாது

ஈ. பங்குடமை சார்பில் ஒப்பந்தம் செய்ய முடியாது. முகவராக தொழில்பட முடியாது.

உ. பங்காளர் நடவடிக்கை பங்குடமையிணையே கட்டுப்படுத்துகின்றது.

(4) 1. அரச கம்பனி 2. மக்கள் கம்பனி

அரசகம்பனி;

1. அரசினை கட்டாயம் அங்கத்தவராக கொண்டது.

2. மூலதனபெயரளவு எல்லை வரையறுக்கப் படவில்லை,

3. அரசினால் தெரிவு செய்யப்படும் இயக்குனர் சபை நிர்வாகம்.

4. இயக்குனர்கள் வேறு கடமையில் ஈடு படலாம்.

5. அரசு ஆகக் கூடிய கட்டுப்பாட்டு முதலை வைத்து இருக்கலாம்.

உ+ம் ஏயர் லங்கா லிமிடெட் கொழும்பு கொமர்ஷல் கம்பனி லிமிடெட்.

மக்கள் கம்பனி:

1. பொதுமக்கள் எல்லோரும் பங்குதாரராகலாம்.

2. பங்கின் முகப்பெறுமதி 10/- வாக இருத்தல் வேண்டும்.

3. பொதுமக்கள் பங்குதாரர்களால் தெரிவு செய்யப்படுகின்ற நிர்வாகம்.

4. இயக்குனர்கள் வேறு கடமையில் ஈடுபடக் கூடாது.

5. வழங்கிய முதலில் ஐந்து வீதத்திற்கு மேல் குடும்பம் வைத்திருக்க முடியாது.

உ+ம் லங்கா சீமெந்து லிமிடெட் லங்கா தோட்ட பொருள் லிமிடெட்.

(5) 1. அமைப்பு புறவிதிக்கு ஒப்பம் இடுவதன் மூலம்,

2. பங்கு எடுக்க சம்மதித்து பதிவேட்டில் கையொப்பம் இடுவதன் மூலம்,

3. பங்கு மாற்றத்தை எடுத்துக் கொண்டு உறுப்பினர் ஆவதன் மூலம்.

4. இறந்த உறுப்பினருக்குப்பதிலாக சேர்ந்தவர்

5. உறுப்பினராக தேர்ந்து முன்னிற்பதன் மூலம்

(6) 1. அரச கம்பனிகளால் முதலீடு சுலபமாகப் பெறப்படுகிறது.

உ+ம் ஊழியர் நம்பிக்கை நிதி முதலீடு

2. அரசின் நேரடியான மேற்பார்வை சிறந்த சேவை.

உ+ம் ஏயர் லங்கா விமானசேவை

3. கம்பனி அமைப்பு வீண்விரயங்களை தவிர்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் பெருந்தோட்ட உற்பத்திக்கான நிறுவனத்தின் பணி.

4. பலவித தொழில்களில் ஈடுபடல்·

உ + ம் கொழும்பு கொமர்ஷியல் கம்பனியின் இயக்கம்

(7) சுவீகரிக்கப்பட்ட முயற்சி அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கைத்தொழில் அமைச்சிடமும் பொருத்தமான சில அமைச்சர்களிடமும் கையளிக்கப்பட்டு இருக்கின்றது இதனை அமைச்சர் ஒரு தத்துவம் பெற்ற அதிகாரியின் ஊடாக நிர்வாகம் செய்து வருகின்ருர். தனித்துவமான நிர்வாகம், இதனுல் உடனடியாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

உ + ம்

1· புகாரி ஹோட்டல் — தனித்தொழில் சுவீகரிப்பு

2. ஜே. பீ. செக்ஸைல் — பங்குடைமை தொழில் சுவீகரிப்பு

3. யூனைட்டட் மோட்டோர்ஸ் — சொந்தக் கம்பனி

4. லேக் கவுஸ் - சிலோன் ரைய்ஸ் — பொதுக் கம்பனிகள்.

5. சிலோன் ஒக்ஸிசன் கம்பனி — பல்தேசீய கம்பனி.

(8) கூட்டுறவின் நவீன தோற்றம் தாராள இறக்குமதிக் கொள்கையினுல் தனித்துவமான போட்டி நிறுவனமாக மாற்றப்பட்டமையேயாகும். இந் நிறுவனத்தின் கட்டுப்பாடுகள் சலுகைகளை அரசாங்கம் தவிர்த்துக் கொண்ட போதும் அவை நிலைத்திருப்பதேயாகும்; இயக்கம் தம்முடைய உபவிதிகளைத் திருத்தி நிரந்தர நிலைக்கு திட்டமிட்டதேயாகும். குறிப்பாக தம்முடைய முதலை 10/- பங்குகளாக மாற்றம் செய்தமை, ஊழியர் குறைப்பு, உணவு முத்திரைக்கு பொருள் வழங்குதல். என்பவற்ருல் அவை நவீன தோற்றம் பெற்று இருக்கின்றன.

(9) அ) கூட்டுத்தாபனங்களின் கூட்டுமுயற்சிச் சேர்க்கைகள்.

ஆ. கூட்டுத்தாபன நிர்வாகம் தனியார் முகாமையிடம் கையளிப்பு.

இ. கம்பனியாக மாற்றம் செய்தல்.

ஈ. புதிய அபிவிருத்தி அதிகாரசபைகள் ஸ்தாபிதம்.

உ. இயங்க முடியாதவற்றைக் கலைத்து புதிய நிறுவனம் ஸ்தாபித்தல்

10 1. பெருஞ்சந்தை (மகாபொல)

2. சிறப்புச்சந்தை

3. நவீனசந்தை

4. இரவுபகல் சந்தை

5. மக்கள் சந்தை (ஜாதிக பொல)

(10ம் பக்கத் தொடர்ச்சி)

(இ) நிகழத்தக்க பொறுப்பு:

ஏற்கனவே இடம் பெற்ற வியாபார நடவடிக்கை ஒன்றைப்பின் பற்றிநேரிடக்கூடிய அல்லது நேரிடமாட்டாத எதிர்காலச்சம்பவங்கள் சில நடைபெறுவதால் நிச்சயமான பொறுப்பாக வரக்கூடிய பொறுப்பாகும்.

(ஈ) இரகசிய ஒதுக்கமும் மறைவொதுக்கமும்:

இரகசிய ஒதுக்கம் எனப்படுவது நிறுவனத்தின் உரிமையாளரால் அறிந்திராதஒதுக்கமாகும். உண்மையில் வெளிப்படுத்த வேண்டிய இலாபத்தைக் குறைத்துக் காட்டும் சகல சந்தர்பங்களிலும் இரகசிய ஒதுக்கம் உருவாகும். மறை வொதுக்கம் எனப்படுவது இரகசிய ஒதுக்கத்திற்கு மாருக இலாபமானது ஏதாவது பொறுப்பு ஒன்றைக் கொண்டிருக்தலாகும், உதாரணமாக: இலாபநட்டக் கணக்கு மீதிசில்லறைக் கடன் கொடுத்தோர் மீதியை உள்ளடக்கியிருப்பின் அது மறைவொதுக்கம் எனப்படும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலும் விஞ்ஞான முறைகளும்

வினா - விடை

சி. லிங்கசாமிசர்மா
B. A. (Hons)

வினா:

பின்வரும் கருத்துச் சோடிகளை வேறு படுத்தியும் ஒப்பு நோக்கியும் ஆராய்க?

1. பொதுக் கருதுகோளும் விஞ்ஞானக் கருதுகோளும்.
2. விஞ்ஞானக் கொள்கைகளும் (Theories) மாதிரிகளும் (Models)
3. தொகுத்தறி அனுமானமும் உய்த்தறி அனுமானமும்
4. எழிய நோக்கலும் பரிசோதனை நோக்கலும்

விடை:

(1) பொதுக் கருதுகோளும் விஞ்ஞானக் கருதுகோளும்.

நேர்வுகளை அவதானிக்கும்போது நமது மனம் அந்நேர்வுகளுக்கிடையேயான தொடர்புகளின் அடிப்படையில் விளக்கங்களை அமைத்துக் கொள்கிறது, பின் விளக்கம் பொய்யானதாயின் விலக்கப்படும். ஆனல் இருநிலைகளிலும் விளக்கம் ஒரு கற்பிதமாகவே இருப்பதனை அவதானித்தல் வேண்டும். இவ்வாறு நேர்வுகளிடையேயானதும் நேர்வுகளைப் பற்றியதுமான கற்பிதமே கருதுகோளாகக் கொள்ளப்படுகின்றது. இடைவிடாமல் நாம் இவ்வாறான கருதுகோள்களை நிகழ்ச்சிகளைப் பற்றி அமைக்கிறோம். கருதுகோளை இவ்வகையில் விளங்கிக்கொண்டு பொதுக் கருதுகோளை நோக்குவோமெனில் சாதாரண வாழ்வில் அமைக்கப்படும் தற்காலிக விளக்கங்களே பொதுக்கருதுகோள்கள் எனப்படுகின்றன என்பதனைக் கண்டு கொள்ளல் வேண்டும். கருதுகோள்களது தோற்றப்பாட்டைப் பொறுத்த வரையில் பொதுக் கருதுகோள்களுக்கும் விஞ்ஞானச் கருதுகோள்களுக்கும் வேறுபாடில்லையே எனினும் உண்மையில் பின்னரே வேறுபாடு இரண்டிற்குமிடையில் ஏற்படுகிறது. அதாவது சாதாரண வாழ்வில் பயன்படும் பொதுக் கருதுகோள்கள் அவ்வளவு செம்மையானவை அல்ல எனலாம். அவற்றின் பயன்பாடு பூரணமாகாத முறையில் பரும்படியானபயன்பாடாக அமைந்துள்ளது, ஆனல் விஞ்ஞானக் கருதுகோள்கள் முழுமையானவையாகவும். நேர்த்தியானவையாகவும் தீர்மானிக்கப்பட்டதன் பின்னரே தோற்றப்பாடுகளின் விளக்கமாகக் கொள்ளப்படக்கூடிய தகுதியை அடைகின்றன, அதாவது பொதுக்கருதுகோள்கள் வெறுமனே நேர்வுகளைப்பற்றி அமைக்கப்பட. விஞ்ஞானச் கருதுகோள்கள் ஏற்கனவே ஒருதுறையில் ஏற்பட்டிருக்கும் விளக்கங்களுக்கு ஏற்றவகையில் நேர்வுகளைப்பற்றி அமைக்கப்படுவனவாக இருக்கும், இவ் வகையில் ஒரு விஞ்ஞானக் கருதுகோளானது ஏற்கனவே அவதானிக்கப்பட்ட நேர்வுகளனைத்தையும் விளக்கக்கூடியாத இருத்தல் வேண்டும், இதனை மேலும் தெளிவாக்கக்கூறின் விஞ்ஞானக் கருது கோளொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புப்பார்த்து உறுதிப்படுத்தப்பட்ட பின்பொதுமைப்பாடான விதியாக அமையக் கூடியதாக இருத்தல் வேண்டும், இவ்வித நிலையோடு தொர்புடையதாக விஞ்ஞானக் கருது கோள் ஒன்று பெற்றிருக்க வேண்டிய இயல்புகளாக

(1) தன்னுள் முரண்பாடற்றதாகவும் நேர் வசன் பற்றி ஏற்கனவே உள்ள விதிகளோடு இசைவானதாக கருது கோள் அமைத்தல் வேண்டும்,

(2) கருதுகோள் ஒன்றில் இருந்து பெறப் படக் கூடிய விளைவுகளை உறுதியான வகை யில் உய்த்தறி அனுமானத்தின் மூலம் பெறுவதற்கு உதவும் நிலையில் கருதுகோள் இருத்தல் வேண்டும்.

(3) இவ்வகையில் அனுமானிக்கப்படும் விளைவுகள் நேர்வுகளுடன் இசையக் கூடிய தாக இருக்தல் வேண்டும் என்பனவும் கூறப் படுகின்றன. இங்கு விஞ்ஞானக் கருதுகோள் ஒன்று பற்றி கூறப்பட்ட இயல்புகளை பூர்த்தி செய்யாததாக பொதுக்கருதுகோள் ஒன்று காணப்படுதல் கூடும். பொதுக் கருதுகோள் ஒன்றிற்கு உதாரணமாக வீட்டில் நாய் குரைத்தபோது "புதியவர் வந்திருத்தல் வேண்டும்" என்பதனையும்; விஞ்ஞானக் கருது கோள் ஒன்றிற்கு உதாரணமாக "பொருட்கள் நிலத்தை நோக்கி விழும் வேகம் புவியீர்ப்பு விசையினால் இடம்பெறு கிறதே அவற்றின் நிறை வேறுபட்டாடினால் அல்ல" எனும் கலிலியோவின் கருது கோளையும் கொள்ளலாம்,

(2) விஞ்ஞான கொள்கைகளும் மாதிரிகளும்

இயற்கை, சமூக விஞ்ஞானங்கள் பல்வேறு வகையான கொள்கைகள் பயன்படுகின்றன உதாரணமாக வாயுக்களின்இயக்கப் பண்புக் கொள்கை, ஆளுமைக்கொள்கை போன்றவற் றைக் குறிப்பிடலாம். ஒரு கொள்கையானது ஒழுங்குபடுத்தப்பட்ட வாக்கியத்தொகுதியா கவும் அவ்வாக்கிய தொகுதி பொதுமைப்பா டான விதிபோன்ற அமைப்புடையதாகவும் அவை அனுபவரீதியாக வாய்ப்புப் பார்க்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும், இவ்வா றன இயல்புகளைப் பெற்றிப்பதே ஒரு விஞ் ஞானக் கொள்கையின் தன்மையாகும். இவ்வாறன வாக்கிய தொகுதியின் வடிவ அமைப்பு வகையீடு எனப்படும், அதாவது உரு அமைப்பு விதி, உருமாற்று விதி. கருத் தளிக்கும் விதி. ஆகியவற்றின் அடிப்படை யில் கொள்கை யொன்று அமைந்திருக்கும் இதில் மூன்றாவது வகையான விதிகளினது செயற்பாட்டின் முன்னுள்ள வடிவநிலையே வகையீடு எனப்படுவதாகும். அதாவது உருவமைப்பு, உருமாற்று விதிகளின் அடிப் படையில் உள்ளவையே கொள்கை யொன்று கொண்டிருக்கும் வடிவநிலையாகும், அவை மூல அம்சங்கள் எனவும் அழைக்கப்படும், வகையீடு ஒன்று கருத்தளிக்கப்படும் நிலை யைப் பொறுத்தே அது கொள்கையெனவும் மாதிரி எனவும் அழைக்கப்படுகின்றன. உதா ரணமாக வகையீடு ஒன்றை C எனக்கொள் வோமெனில் மின்சாரம் செப்புக்கம்பிஊடா கப்பாயும்என்ற வகையில் கருத்தளிக்கப்படும் போது மின்சாரம் பற்றிய ஒரு கொள்கை யாக அது மாறுகிறது. இக் கொள்கையை நாம் விளங்கிக் கொள்வதற்காக குறிப்பிட்ட வகையீட்டுக்கு குளாய்களூடாக நீர் பாயும் என்ற வகையில் கருத்தளிக்கும் போது அது முந்திய கொள்கையின் மாதிரியாகிறது. அதாவது கொள்கையொன்று பெறப்பட்ட வகையீட்டுக்கு அக் கொள்கையை விளங்கி கொள்ளும் வகையில் எமக்குப் பரிச்சயமான மொழியினால் இரண்டாவது தடவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கொடுக்கும் போது பின்னதுமுன்னையதின் மாதிரியாக இருக்கும். ஒன்றைக் கொள்கையெனவும் மற்றொன்றை அதன் மாதிரியெனவும் கொள்வதற்கு அவற்றின் வகையீட்டு நிலையில் "வடிவொப்பு" க் காணப்படுவது ஓர் இன்றியமையாத நிலையாகும். மாதிரி ஒன்றின் மூலம் கொள்கையை விளங்குவது சிறிது சுலபமாக இருப்பதால் மாதிரிவிஞ்ஞான முன்னேற்றத்திற்கு உதவுகிறது எனலாம். எனினும் மாதிரியினூடாக கொள்கையை விளங்கும் போது சில தவறுகளும் ஏற்பட வாய்ப்புண்டு உதாரணமாக F1, F2, என்பன மாதிரியில் உள்ள தேவையற்ற அம்சங்களாக இருப்பின் இது போன்ற தேவையற்ற இயல்புகளை கொள்கையிலும் இருப்பதாகக்கொள்வதற்கு இது ஏதுவாக அமையலாம், கொள்கையொன்றுக்கு மாதிரியமைக்கப்பட்டபின் அம் மாதிரியை விளங்கிக்கொள்ள இன்னோர் மாதிரி அமைக்கபடுமாயின் முன்னைய மாதிரி கொள்கையாகவும் பின்னைய மாதிரி மாதிரியாகவும் அமையும் வகையீட்டின் மூல அம்சங்களுள் ஒன்றோஅல்லது பலவோ மாற்றப்படின் அவ்வகையீட்டின் வடிவம் முன் கூறியதில் இருந்து வேறுபட்டதாக இருக்கும். உதாரணமாக C என்ற வகையீட்டின் மூல அம்சங்கள் மாற்றப்படும், போது அது C1 எனும் வகையீடாக இருக்கும், மாற்றப்பட்ட மூல அம்சங்களை கொண்டு புதிய வகையீட்டுக்கு கருத்தளிக்கும் போது அது வேறொரு புதிய கொள்கையாக் அகிறது. உதாரணமாக C எனும் வகையீடு 1. சளி 2. மச்சை 3. இரத்தம் 4. பித்தம் என்று கருத்தளிக்கப்படும் போது அது உளவியலில் ஆளுமைக் கொள்கையாகிறது. மூல அம்சங்கள் மாற்றப்பட்ட நிலையில் C1எனும் வகையீட்டுக்கு 1. கறுப்பு 2.வெள்ளை, 3, மஞ்சள் 4. சிவப்பு எனக்கருத்தளிக்கப்படும் போது அது உளவியலில் மனித நிறங்களைப் பற்றித் தெரிவிக்கும் கொள்கையாக மாறுகிறது வகையீட்டின் மூல அம்சங்கள் எனும் போது மூலப் பதங்கள் எனக் கொள்ளலாம் இவ்வகையில் கொள்கைமாதிரி, என்பன செயற்படும்விதத்தை அளவையியாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

(3) தொகுத்தறி அனுமானமும் உய்த்தறி அனுமானமும்

விஞ்ஞான விளக்கங்கள் அமைக்சப்படும் போது பயன்படுத்தப்படும் முறைகளாக இவ்விருமுறைகளும் கொள்ளப்படுகின்றன, இவ்விரண்டு முறைகளையும் முற்றிலும் வெவ்வேறானவை என்ற வகையில் வேறு படுத்த முடியாதாயினும் ஓரளவு அவை வேறுபாடனவையேயாகும். தொகுத்தறி அனுமானம் ஓர் அபூரண எண்ணீட்டுமுறையாகக் கொள்ளப்படலாம். தனிப்பட்ட நேர்வுகளில் இருந்து பொதுப்படையான ஒன்றுக்குச் செல்வதே தொகுத்தறி அனுமானம் எனப்படுகிறது. அதாவது தனிப்பட்ட நேர்வுகள் அவதானிக்கப்பட்டுப் பெறப்பட்ட முடிவுகளில் இருந்து பொதுமைப்பாடான நிறைவெடுப்பு முடிவுகள் பெறப்படுவதே தொகுத்தறி அனுமானம் எனப்படுகிறது. தொகுத்தறி அனுமானம் நோக்கலில் ஆரம்பித்து கருதுகோள் அமைத்தல் அவற்றின் உட்கிடைகளை விரிவாக்குதல், அவற்றைப்பரிசோதித்து உறுதி செய்து பொது முடிவுகளைப் பெறல் எனும் பருவங்களூடாகச் செயற்படுகின்றது. இந் நான்கு பருவங்களே தொகுத்தறி அனுமானம் பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது வடிவமாகக் காணப்படுவதாகும். எனினும் விஞ்ஞான முறைகளின் தந்தை எனப்படும். பிரான்சிஸ் பேகன் என்பவரும் உல்ப் (Wolf) என்பவரும் கருதுகோள் பருவங்களைக் குறிப்பிடவில்லை. தொகுத்தறி அனுமான மொன்

றினை ஓர் எளிய உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்வோமெனில் A, B, C, D, ஆகியவர்கள் கறுப்பு நிறத்தவர்கள் A,B,C, D, ஆகியோர் நைஜீரியர்கள் ∴ நைஜீரியர்கள் கறுப்பர்கள் என்பதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். இங்கு அவதானிக்கப்பட்ட வற்றுள் முரண்பாடெதுவும் இல்லாமையாலேயே குறிப்பிட்ட பொது முடிவு பெறப்பட்டது. ஆகவே இவ்வாறான வடிவமுடைய தொகுத்தறிவனுமானமொன்றில் எப்போதும் காணப்படும் வாய்ப்பு எதுவெனில் முரண்பாடான உதாரணமொன்று அல்லது நேர்வொன்று எப்போதாவது காணப்படுமாயின் அமைக்கப்பட்ட பொது முடிவு தவறக்கூடியது என்பதேயாகும்.

இவ்வாறான தொகுத்தறி அனுமானமொன்று பெற்றுக்கொண்ட பொது முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு தனி நேர்வுகள் பற்றி முடிவுகளைத் தருவதே உய்த்தறி அனுமானம் ஆகும். அதாவது பொதுமைப்பாட்டில் இருந்து தனியன்களை விளக்குவது உய்த்தறி அனுமானத்தின் இயல்பு எனலாம். உய்த்தறி அனுமானமொன்றின் மற்றொரு இயல்பெதுவெனில் தரப்படும் ஆதாரங்கள் உண்மையாகவும் வாதம் வலிதாகவும் அமையுமாயின் எடுக்கப்படும் முடிவும் இன்றியமையாத வகையில் உறுதியான உண்மையாக இருக்கும் என்பதேயாகும். உதாரணமாக வெப்பத்தில் வாயுக்கள் விரிவடையும் என்பது நாம் எடுத்துக்கொள்ளும் நிறைவெடுப்பு விதி எனில் குறிப்பிட்ட அளவில் வெப்பத்தினால் வாயுத்திணிவொன்றின் நடவடிக்கைபற்றி நாம் முடிவு கூறக் கூடியதாக அமையலாம் ஏற்கனவே தரப்பட்ட விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய விளக்கம் தரப்படுகிறது. அதாவது நேர்வுகளுக்கிடையேயான இணைப்புத் தரப்பட: அதிலிருந்து இணைக்கப்படுவது எது எனக் காட்டுகிறோம்.

இதற்கு எதிர்மாறாக தொகுத்தறி அனுமானம் சிக்கலான நேர்வுகளிடையே ஓர் இணைப்பைத்தர முயற்சிக்கிறது. ஆகவே பொதுமைப்பாட்டிலிருந்து தனியன்களுக்கு உய்த்தறி அனுமானம் வர தனியனில் இருந்து பொதுமைப்பாட்டிற்கு தொகுத்தறி அனுமானம் செல்கிறது. ஒன்றின் தலைகீழ் வடிவமாக மற்றையது காணப்படுகிறது எனலாம். எனினும் தொகுத்தறி அனுமானமும் கூட உய்த்தறி அனுமானத்தின் அடிப்படையிலேயே இயங்குவதாக அளவையியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எளிய நோக்கலும் பரிசோதனை நோக்கலும்

நேர்வுகளை விளக்குவனவாக விஞ்ஞானத்துறைகள் அனைத்தும் காணப்படுகின்றன. நேர்வுகள் எவ்வளவு சரியாக சிந்திக்கப்படுகின்றனவோ அவ்வளவு நேர்த்தியாக விஞ்ஞான விளக்கங்களும் காணப்படும். ஆனல் நேர்வுகள் அறியப்படுதல் என்பது நோக்கலின் மூலமே இடம் பெறுகின்றது. இவ்வகையில் விஞ்ஞான ஆட்வுகளுக்கு நோக்கல் இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

நோக்கப்படுகின்ற பொருளை எவ்விதத்திலும் மாற்றத்திற்குட்படுத்த முயலாமல் இருக்கின்றவாறே நோக்குவது தூய எளிய நோக்கலாகும். இவ்வாறான எளிய நோக்கல் நேரடியாக இடம் பெறும் நடவடிக்கையாகும். ஆராய்ச்சிக்குட்படுத்தப்படும் நேர்வுகள் எவ்விதத்திலும் மாற்றப்பட்டோ அல்லது கட்டுப்படுத்தப்பட்டோ நோக்கப்படுவது பரிசோதனை நோக்கல் எனப்படுகிறது. எளிய நோக்கல் ஒன்று நேரடியாக இடம்பெறும் போது நமது புலப்பதிவுகள் அனேக தவறுகளை இழக்கின்றன என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மறுத்தலாகாது. அந்நியர்களை உறவினர்களாகவும் உறவினர்களை அந்நியர்களாகவும் நோக்குகிறோம் நூல்களின் பக்கங்களில் இல்லாத சொற்களை வாசித்துள்ளோம். இவையெல்லாம் எளிய நோக்கலின் போது இடம்பெறக்கூடிய தவறுகளாக உள்ளன. மற்றும் சில வேளைகளில் நோக்குபவன தான் எதிர்பார்க்கும் அனுபவத்தை நோக்கலின் போது பெறக்கூடியவனாகிறான். முக்கியமானவைசில அவதானிக்காமல் விடப்படுவதும் ஏற்படுவதுண்டு. இதனால் நோக்கல் தேர்வு செய்தல் நெறியாக அமைகிறது. எத்தகைய நேர்வுகளை நோக்குதல் என்பது எமது அந்நேரத்தைய இலக்கைப் பொறுத்ததாகும். இவ்வாறான எளிய நோக்கல் ஒன்றின்போது முன்பு கூறியபடி இன்றியமையாதன கவனிக்காமல் விடப்படுவதும் இன்றியமையாதனவல்லாதன கவனத்திற்கொள்ளப்படுவதும் உண்டு.

இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்து ஓரளவிற்கு நேர்வுகள் செம்மையாக நோக்கப்படுதல் என்பது பரிசோதனை நோக்கல் ஒன்றில் இடம்பெறுதல் கூடும் புலன்களது குறைபாடுகளை ஓரளவு ஆயினும் நிவர்த்தி செய்வதற்கென விஞ்ஞானக் கருவிகள் இடம்பெறுகின்றன. கேட்கமுடியாத ஒலிகளைக் கேட்டல், மிகவும் நுண்ணியவற்றை பார்த்தல் போன்றன. ஒலிபெருக்கி நுணுக்குக்காட்டி போன்ற விஞ்ஞான உபகரணங்களினுதவியுடன் செய்யப்படுதல் கூடும். எளிய நோக்கலில் இருந்து பரிசோதனை முறைக்குச் செல்லும் ஓர் அம்சமே கருவிகளைப் பயன்படுத்துவதாகும். தோற்றப்பாடு ஒன்று நிகழ்வதற்கான நிபந்தனைகள் யாவற்றையும் பூரணமாகவும் செம்மையாகவும் அறிந்துகொள்வதே நோக்கலின் இலட்சியமாக இருக்கிறது. ஆனால் அவ்விதமான நிபந்தனைகள் வேண்டப்படாத பலவற்றுடன் சிக்கலான வகையில் இணைந்து காணப்படுகின்றன இவ்வாறு காணப்படும் புறம்பானவற்றை விலக்குவதற்கு எளிய நோக்கல் ஒன்று பயன் தராது என்பதனால் தேவையானவற்றை மட்டும் கண்டுகொள்வதற்கு வரையறுக்கப்பட்ட நிலையில் நேர்வுகளை நோக்குதலே பரிசோதனை நோக்கல் எனப்படும் உதாரணமாக முற்கால வானியலாளர்கள் கிரகங்களை வெறுமனே நோக்கியபோது வெறும் தூய எளிய நோக்கலில் ஈடுபட்டனர் எனலாம். ஆனால் இன்றைய வானியலாளர்கள் உடுமாற்றம், கிரகங்களது இடப்பெயர்ச்சி என்பவற்றை அவதானிப்பதற்காக பொருத்தமான காலம் இடம் என்பவற்றை முன்னமேயே தீர்மானித்துக் கொள்ளுகின்றனர். ஆராயவேண்டிய தோற்றப்பாட்டுக்குப்புறம்பான நிலைகளும் ஆய்வில் தடையை ஏற்படுத்தக்கூடிய நிலைகளும் பரிசோதனை முறை நோக்கலின்போது இயலுமான அளவு தவிர்க்கப்படுகின்றன. இயற்கையில் தெளிவாக் இடம்பெறாத தோற்றப்பாடுகள் பரிசோதனை நோக்கலில் உண்டாக்கப்பட்டு நோக்கப்படுகின்றன. உதாரணமாக சூனியத்தில் பொருட்கள் விழுதல், ஐதரசன், ஒட்சிசன் போன்ற வாயுக்கள் திரவமாதல் போன்றன இவ்வாறு நோக்கப்பட்டமைக்கான தகுந்த உதாரணங்களாக இரசாயனத்தில் இடம்பெற்றுள்ளன எனலாம். எளிய நோக்கலும், பரிசோதனை நோக்கலும் அடிப்படையில் ஒரே விதமான குறிக்கோளையுடையனவாயினும் பரிசோதனை நோக்கலானது முன்னையதிலும் பார்க்க நேர்வுகளைச் செம்மையாக நோக்குவதற்கு உதவுகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உண்மைத் தேசிய வருமானமும் தேறிய பண்ட வர்த்தகமாற்று விகிதமும்

N. கிருஷ்ணனந்தன் B. A. (Hons)

ஒரு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தின் செயலாற்றத்தை அறிந்து கொள்வதற்கு மாறுநிலையிலான மொத்தத் தேசிய உற்பத்தியினைப் பயன்படுத்துவதிலும் பார்க்க உண்மைத் தேசிய வருமானத்தினைப் பயன்படுத்துவதே கூடியளவு பொருத்தமுடையதாக இருக்கும். யாருநிலைத் தேசியஉற்பத்திப் பெறுமதியானது நாட்டின் மெய்யான தேசிய உற்பத்திப் பெறுமதியை மட்டுமே புலப்படுத்தும். அதன் கொள்வனவுத் தகுதி என்பதனைப் புலப்படுத்தி விடமாட்டாது. ஏனெனில் அந்த நாட்டின் ஏற்றுமதிப் பண்டங்களின் இறக்குமதிக் கொள்வனவு சக்தியில் ஏற்பட்ட மாற்றங்களை இது கவனத்தில் கொள்வதில்லை. எனவே தான் உண்மைத் தேசிய வருமானம் என்பதனையே பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் இலங்கைப் பொருளாதாரமும் ஓர் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாகவே இருப்பதனால் அதன் செயலாற்றத்தினை அறிந்துகொள்ள இலங்கையின் உண்மைத் தேசிய வருமானத்தின் போக்கினை அவதானித்தல் வேண்டும்.

உண்மைத் தேசிய வருமானம் என்பதனைப் பின்வருமாறு வரையறுத்துக்கொள்ளலாம். ''மாறு காரணி செலவிலான (1970 = 100) மொத்த தேசிய உற்பத்தியுடன் பண்ட வர்த்தக மாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களினால் உண்டாகிய விளைவுகளை (பெறுகைகள் / இழப்புகள்) சேர்த்துக் கொண்ட பெறுமதியே'' எனலாம்.

உண்மை தே வ. = மாறு செலவிலான மொ தே. உ. + வ. மா. வி. விளைவுகள்

இங்கு வர்த்தக மாற்று விகிதத்தின் விளைவுகள் எனக்குறிப்பிடுவதன் கருத்து இலங்கையின் ஏற்றுமதிப்பண்டங்களின் விலைகள் இறக்குமதிப் பண்டங்களின் விலைகளுடன் தொடர்புடையதாக அடிப்படையாண்டிலிருந்து எவ்வாறு மாற்றமடைந்து செல்கின்றது என்பதேயாகும். இதன் கருத்தினைப் பின்வருமாறுகூறிவிடலாம் இலங்கை தனது ஏற்றுமதிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பரிவர்த்தனையின் போது ஏற்றுமதி வருமானத்தில் வர்த்தக மாற்று விகிதத்தில் எழுந்த விளைவுகளால் தேறிய இழப்புகளா அல்லது நன்மையா அடையப்பட்டது என அளவீடு செய்வதனைக் குறிக்கும் தேறிய பண்ட வர்த்தக மாற்று விகிதத்தினைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\frac{PX}{PM} \times 100$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PX = ஏற்றுமதி விலைச்சுட்டெண்,
PM = இறக்குமதி விலைச்சுட்டெண் மெய்யான (மாறுவிலை) தேசிய உற்பத்தியைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\frac{\text{நடைமுறைவிலைத்தேசிய உற்பத்தி}}{\text{தேசிய உற்பத்தி சுருக்கி}} \times 100$$

தேறிய பண்ட வர்த்தகமாற்று விகிதம் எவ்வாறு இலங்கையின் மெய்த்தேசிய உற்பத்தியைப் பாதிக்கின்றது என்பதனைப் பின்வருமாறு கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

$$V\left(\frac{1}{PM} - \frac{1}{PX}\right)$$

V = தரப்பட்ட ஆண்டின் நிகழ்கால விலைகளில் ஏற்றுமதிப் பெறுமதி இது (F. O. B.) பெறுமதியிலளவிடப்படும்.

PX = குறித்த ஆண்டின் ஏற்றுமதி விலைச்சுட்டெண்

PM = குறித்த ஆண்டின் இறக்குமதி விலைச்சுட்டெண்

தேறிய பண்ட வர்த்தக மாற்று விகிதத்தினால் தேறிய நன்மையா அல்லது இழப்பா என்பதனைக் கணிப்பிட

1. ஏற்றுமதிகளின் F. O. B. பெறுமதியை அந்த ஆண்டினது இறக்குமதி விலைச்சுட்டெண்ணினால் சுருக்குதல் வேண்டும்.

2. ஏற்றுமதிகளின் F. O. B. பெறுமதியை அந்த ஆண்டின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணினால் சுருக்குதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இரு பெறுமதிகளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு எதிர்க்கணியமாக இருந்தால் இலங்கையின் உண்மைத் தேசிய வருமானத்தை வர்த்தக மாற்று விகிதத்தின் போக்கு அப்பெறுமதி அளவினால் குறைவடையச் செய்துள்ளது என்பது கருத்தாகும். அதேபோல் பெறுமதி நேர்கணியமானால் அது இலங்கையின் உண்மைத் தேசிய வருமானத்தை அப்பெறுமதியால் அதிகரிக்கச் செய்துள்ளது என்பதே கருத்தாகும். இதனைக்கொண்டு வர்த்தக மாற்று விகிதம் சார்பாக மாறியுள்ளதா இல்லையா என்பதனை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு உண்மைத் தேசிய வருமானத்தை மதிப்பிடும் போது ஏற்றுமதிகளை நான்கு வகுதிகளாக வகைப்படுத்துவது வழக்கம்

1. தேயிலை
2. இறப்பர்
3. மூன்று முக்கிய தெங்குப் பொருட்கள்
4. ஏனைய ஏற்றுமதிகள்

தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களினது ஏற்றுமதிகளினது F. O B பெறுமதியை முதலில் எல்லா இறக்குமதி விலைச்சுட்டெண்ணினாலும் சுருக்கி பின்னர் தேயிலை, இறப்பர், தெங்கு என்பவற்றின் ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணினாலும் சுருக்குதல் வேண்டும். ஏனைய ஏற்றுமதிகளின் பெறுமதியை ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணினால் சுருக்கியும், பின்னர் இறக்குமதி விலைச்சுட்டெண்ணினால் சுருக்கவும் வேண்டும். இவ்வாறு கணிப்பிடும் ஒவ்வொரு இனத்தினதும் பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாடு வர்த்தக மாற்று விகித மாற்றத்தினால் இழப்பினையா, நன்மையினையா வழங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது என்பதனை தேயிலை, இறப்பர், தெங்கு பொருள், ஏனையவை என்பவற்றைப் பொறுத்து அறிந்து கொள்ள உதவுகின்றது.

இவ்வாறு கணிப்பிடப்பட்ட உண்மைத்தேசிய வருமானத்தின் போக்கினையும் பின்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது. 1970-ம் ஆண்டினை அடிப்படையாகக்கொண்டு கணிப்பிடப்பட்ட தேசிய உற்பத்திப் பெறுமதியைக்கொண்டே இவ் அட்டவணை தயாரிக்கப்பட்டதாகும்.

இலங்கையின் உண்மைத்தேசிய வருமானம் (1970 - 1980) (மில்லியன் ரூபாவில்)

விடயம்	1970	1972	1973	1974	1975	1976	1977	1978	1979	1980
(1) மாறுகாரணி செலவிலான (1970) மொ. தே. உ.	12967	13174	14016	1450.5	14896	15345	15999	17311	18389	19405
(2) ஏற்றுமதிகளால் வர்த்தக மாற்று விகிதத்தில் எழுந்த விளைவுகள் (பாதகமானவை)										
(அ) தேயிலை ...			280.1	427.5	513.7	319.9	+54.8		392 9	542.2
(ஆ) இறப்பர் ...		124.1	55.2	78.4	230.1	60.6	100.5	160.6	96.3	153.2
(இ) மூன்று முக்கிய தெங்குபொருள்		110.2	47.2	16.1	73.1	51.1	2.4	9,7	8.6	37.7
(ஈ) ஏனையவை ...		19.3	58.1	158.7	207.9	238 1	171.0	114.4	337.3	472.7
மொத்தம் ...		253.6	440.6	648.5	1024 8	669.7	219.1	284 7	835.1	1205.8
(3) மாறுகாரணி செலவிலான (1970) உண்மைத் தேசிய வருமானம் (1-2)	12967	13220	13575	13856	1 3871	14675	15780	17026	17554	18199
(4) உண்மைத்தேசிய வருமான வளர்ச்சிவீதம்		1.9	2.7	2.1	0.1	5.8	7.5	7.9	3.1	3 7
(5) மாறு விலைத்தேசிய உற்பத்தி வளர்ச்சிவீதம்		3.4	4.0	3.5	2.7	3.0	4.3	8.2	6.2	5.5

(ஆதாரம் மத்தியவங்கி அறிக்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உண்மைத் தேசிய வருமானத்தின் போக்கினையும், மாறுவிலைத் தேசிய உற்பத்தியின் போக்கினையும் 1972ம் ஆண்டிலிருந்து நோக்கினுல் வர்த்தகமாற்று விகிதம் இலங்கைக்குப் பாதகமாகவேமாறிச் சென்றுள்ளதனை நோக்கலாம். 1977–ல் மட்டும் தேயிலையின் மீதான விளைவு நேர்க்கணியமாக இருப்பது ஒன்று மட்டுமே. ஏனையயாவும் எதிர்க்கணியமாகவே உள்ளது புலனுகின்றது, 1972 முதல் 1975 வரையில் மாறுவிலை தேசியஉற்பத்தி வளர்ச்சிவீதத்தினிலும்விட உண்மைத் தேசிய வருமானத்தின் வளர்ச்சிவீதம் குறைவாகவே இருந்துள்ளது. ஆனுல் 1976லும், 1977லும் மட்டும் உண்மைத்தேசிய வருமானத்தின் வளர்ச்சிவீதத்தின் வளர்ச்சி வீதம் அதிகமாக இருந்துள்ளது, இவ்விரு ஆண்டுகளிலும் நாட்டின் வர்த்தக நிலுவை சாதகமாக இருந்ததுடன் 1977ல் நாட்டின் நடைமுறைக் கணக்கு மீதியும் சாதகமாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்விரு ஆண்டுகளிலும் வர்த்தக மாற்று விகிதமானது முன்னேற்றமடைந்தமையே காரணமாகும். 1977க்குபின் மாறு வீலைத் தேசிய உற்பத்தி வளர்ச்சிவீதம் உண்மைத் தேசிய வருமான வளர்ச்சி வீதத்தினை விட உயர்வாக இருந்துள்ளது. இலங்கையின் பண்டவர்த்தக மாற்று விகிதம் 1975ல் மிக மோசமடைந்தமையினுலேயே அந்த ஆண்டில் அதன் வளர்ச்சி வீதம் மிகக்குறைந்த, 0.1 என்ற வீதமாக உள்ளது. 1979லும், 1980லும் வர்த்தகமாற்றுவிகிதம் வீழ்ச்சிப்போக்கினைக் கொண்டிருந்தது. 1979ல் ஏற்பட்டவீழ்ச்சி அதிகமானதாகவும் 1980ல் வீழ்ச்சி சிறிது குறைவாக இருந்தமையினுல் உண்மைத் தேசியவருமான வளர்ச்சி வீதம் 1979 னை விட 1980ல் சிறிது உயர்வாயுள்ளது. எனவேதான் பொருளாதார செயலாற்றத்தை விளக்கும் போது மாறுவிலைத் தேசிய உற்பத்தியுடன் உண்மைத் தேசிய வருமானத்தையும் கவனத்தில் கொள்ளுவதன் மூலமே சிறப்பாக விளக்கமுடியும்,

★

புணர்ச்சி:

கருத்தைப் புலப்படுத்துவதற்காகத் தொடரும் இரு சொற்கள் ஒன்றுசேரும் இணைப்பே புணர்ச்சி எனப்படும்.

உவமைத்தொடர்:

நன்ருகத் தெரிந்த ஒரு பொருளின் தன்மையை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் தன்மையை அறிவுறுத்தும் தொடர் உவமைத் தொடராகும்.

ஆகுபெயர்:

ஒன்றினது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றிற்குத் தொன்றுதொட்டு வழங்கி வருவது ஆகுபெயர் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா - விடை

T. N. செல்வகுமார் B. A. (Hons)

வினா:

பின்வருவனவற்றினைப் பற்றிச் சிறு குறிப்பெழுதுக?

1. விசேட எடுப்பனவு உரிமை (S D, R)
2. உலக வங்கி (I. B. R. D.)
3 சர்வதேச நாணயநிதி (I M. F)
4. ஒபெக் நாடுகள் (OPEC)

1. விசேட எடுப்பனவு உரிமை (S. D. R)

விசேட எடுப்புரிமை என்பது சர்வதேச நிதியினால் உருவாக்கப்பட்ட பொது நாணயத்தைக் குறிக்கின்றது. சர்வதேச வர்த்தகத்தில் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்கு பொதுநாணயங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சர்வதேச நாணயங்களாக பிரித்தானியாவினுடைய ஸ்ரேலிங் பவுணும் ஐக்கிய அமெரிக்காவின் டொலரும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவை நாடுகளுடைய நாணயங்களாக காணப்பட்டதினாலும்பொருளாதார வளர்ச்சியடைந்து வருகின்ற வளர்ச்சியடைந்த நாடுகளுடைய நாணயக் கேள்வியினை நீக்க முடியாத காரணத்தினாலும் விசேட எடுப்புரிமை அமைக்கப்பட்டது.

நாணயத்தின் கேள்வி விரைவாக அதிகரித்தமையினால் கேள்விக்கு ஏற்றளவு நாணய நிரம்பல் அதிகரிக்கவில்லை எனவே திரவத்தன்மை பிரச்சினை 1970-ம் ஆண்டு வரை வேகமாக அதிகரித்துக் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலரோ பிரித்தானிய நாணயமோ தேவைக்கேற்றளவு நிரம்பல் செய்ய முடியாததாகக் காணப்பட்டது. ஏனெனில்நாடுகளுடையபொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பவே நாணய வெளியீடுகளை செய்துகொள்ள முடியும். 1950-ம் ஆண்டிற்கு பிற்பட்ட காலப்பகுதியில் இருந்து பொருளாதார வளர்ச்சி குறைவாக இருந்த காரணத்தினால் நாணய வெளியீடும் குறைவாகக் காணப்பட்டது. எனவே நாணய கேள்வியிலும் பார்க்க நாணய நிரம்பல் குறைவாக காணப்பட்டது.

திரவத்தன்மை பிரச்சினை என்பது இரண்டு காரணத்தினால் ஏற்பட்டது.

1. அவை ஒரு நாட்டிற்கு சொந்தமான நாணயமாக காணப்பட்டது.

2. கேள்விக்கு ஏற்றளவு நாணயம் நிரம்பல் செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட இவ்விரு பிரச்சினைகளை யும் நீக்கவேண்டுமாயின் ஓர் பொதுவான நாணயம் தோற்றம்பெற வேண்டும். அது எந்த நாட்டிற்கும் சொந்தமாக இருக்கக் கூடாது. பொது நாணயங்கள் கேள்விக்கு ஏற்ப நிரம்பல் செய்யுமாயின் இப்பிரச்சினை நீக்கப்படும்

இதை மையமாகக் கொண்டே 1968-ம் ஆண்டு சர்வதேச ரீதியாக அங்கம் பெறும் 10 நாடுகள் சேர்ந்து விசேட எடுப்புரி மையை உருவாக்குவதற்கு அங்கீகாரம்வழங் கின. 1970-ம் ஆண்டு முதன்முதலாக S. D. R. நாணயம் வெளியீடு செய்யப்பட் டது. வெளியீடு செய்யப்பட்ட நாணயம் சர்வதேச நாணயநிதியில் அங்கத்துவம் வகிக்கின்ற அங்கத்துவத் தொகையை வழங் கிய அடிப்படையில் பங்கீடு செய்யப்படுகின் றது. உருவாக்கப்பட்ட நாணயங்களை பின் வருமாறு குறிப்பிடலாம்:

1970	—	3.5 B
1971	—	3 B
1972	—	3 B
1977	—	29 2 B
1978	—	39.4 B

S. D R. நாணயம் திரவத் தன்மை பிரச்சினையை தீர்த்துள்ளதா? என்று நோக் கும் பொழுது பிரச்சினைகளை குறைத்துள் ளது எனக் குறிப்பிடலாம். பொதுவான நாணயமாக உருவாக்கப்பட்டதினுலும் நாட்டு நாணயமாக காணப்படாததினுலும் தேவைக்கு ஏற்றளவு நிரம்பல் செய்ய முடி வதினுலும் பிரச்சினையை குறைத்துள்ளது. அதிகளவு நாணயத் தேவையுள்ள நாடு குறைவிருத்தி நாடுகளாகும் குறைவிருத்தி நாடுகள் அங்கத்துவ தொகையை குறை வாக செலுத்திய காரணத்தினுலும் குறை வாகவே பொது நாணயங்கள் பெறுகின்றன, குறைவான பொதுநாணயம் குறைவிருத்தி நாடுகளுடைய திரவத் தன்மையை நீக்குவ தில்லை. எனவே குறைவிருத்தி நாடுகளை பொறுத்தவரை விசேட எடுப்புரிமை அதி களவு பிரச்சினையை நீக்குவதில்லை என குறைவிருத்தி நாடுகளினுல் கூறப்பட்டு வரு கிறது.

1978-ம் ஆண்டுவரை மொத்தமாக வெளியீடு செய்யப்பட்ட விசேட எடுப்புரி மையில் மூன்று வீதமே குறைவிருத்தி நாடு களால் பயன்படுத்தப்பட்டது ஏனையவை வளர்ச்சியடைந்த நாடுகளினுல் பயன்படுத் தப்பட்டன.

2. உலக வங்கி *(I. B R. D.)*

உலக வங்கியை சர்வதேச அபிவிருத்தி புனருத்தாரண வங்கியெனவும் அழைத்துக் கொள்ளலாம். இவ் உலக வங்கி 1944-ம் ஆண்டு 28 நாடுகளுடைய அங்கீகாரத்து டன் பிறிட்டன் வூட்ஸ் உடன்படிக்கையின் படி அங்கிகாரம் வழங்கப்பட்டது. 1946-ம் ஆண்டிலிருந்தே உலக வங்கி தொழிற்பட ஆரம்பித்தது. இன்று ஏறத்தாழ 132 நாடு கள் அங்கத்துவம் பெறுகின்றன. இவ்வங்கி முதலாம், இரண்டாம் உலக யுத்தத்தில் ஏற்பட்ட பொருளியல் பாதிப்பை நீக்குவ தற்காக கடன் வழங்குதலே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனவே தான் இது அபிவிருத்தி புனருத்தாரண வங்கியென அழைக்கப்படுகின்றது.

இவ் வங்கியினுடைய நோக்கத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. உலக வங்கி பெரும்பாலும் அதன் அங் கத்துவம் பெறுகின்ற உறுப்பினர் நாடு களுக்கே கடன் வழங்குகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2: உறுப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் அவற்றின் பொருளாதாரத்தை சீரமைப்பதற்காகவும் முதலீடுகளை வழங்குகின்றது.

3. அங்கத்துவ நாடுகளுடைய தனியார் முதலீடுகளுக்கு ஊக்கம் கொடுப்பது, அதாவது தனியார் முதலீடுகளுடன் இணைந்து தமது முதலீட்டையும் ஏற்படுத்திக்கொள்வது.

4. அங்கத்துவ நாடுகளை பொறுத்தவரை தனியார் முதலீடு எங்கு நியாயமானதாக கிடைக்கவில்லையோ அங்கு உற்பத்தி நோக்கத்திற்காக கடன்களை வழங்குகின்றது. பெரும்பாலும் இக்கடன்கள் நீண்டகால கடன்களாகவே காணப்படுகின்றன

இவ் உலக வங்கியின் செயற்பாடுகள் பின்வருமாறு:

நிதியுதவி வழங்கும்பொழுது பல்வேறு அம்சங்களை கருத்தில் கொண்டே கடன்களை வழங்குகின்றது. திட்டங்களுக்கான கடன்கள் வழங்கும்போது அத்திட்டங்களை ஆராய்வதற்கு உலக வங்கி ஒரு குழுவை அனுப்புகிறது. அவ் உலக வங்கிக்குழு குறிப்பிட்ட நாட்டின் திட்டங்கள் பற்றி அறிந்து அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னரே நிதி உதவி வழங்கப்படும். இத்திட்டத்திற்கான கடன் பெறும் நாடுகள் கடனைத் திருப்பி செலுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். அரசாங்கமோ அல்லது பொதுக்கம்பனிகளோ இக்கடனை திருப்பி வழங்கக்கூடியதாக காணப்படுகின்றது திட்டத்தின் நன்மைகள் பற்றி ஆராய்ந்து செலவிலும் பார்க்க நன்மைகள் கூடுதலாக இருத்தல் வேண்டும் பெரும்பாலும் இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் நாடுகளின் அபிவிருத்திக்காகவே காணப்படும் இவ்வாறு கடன் வழங்கலில் காணப்படும் நிபந்தனை ஒரு குறைபாடாக குறிப்பிடலாம். அதாவது வங்கிக்குழு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படலாம். இக்காலதாமதம் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக அமையும். மேலும் இக்குழு ஆராய்ந்ததன் பின் கடன் வழங்காமலும் இருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனவே உலக வங்கிக்குழுவினால் கடன் வழங்கப்படும் நிபந்தனைகள் தளர்ச்சிப்படுத்தப்பட வேண்டுமென கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்சி பல்வேறு கடன்களை வழங்கி வந்தது, இதில் கூடுதலாக கடன் பெற்ற நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளாகவே காணப்படுகின்றது வளச்சியடைந்துவரும் நாடுகளில்இந்தியாவே அதிக கடன் பெற்ற நாடாகும்.இதற்குமுக்கியகாரணம் உலகவங்கியில் அங்கத்துவப் பணம் செலுத்திய ஐந்தாவது நாடாக இந்தியா காணப்படுகிறது, அதிகளாவன உறுப்பினர் தொகையை வழங்கிய நாடு ஐக்கிய அமெரிக்காவாகும். இது 6350 M டொ. வழங்கியது. பிரித்தானிய 2600M டொ. வழங்கியது. ஜேர்மனி 1280M டொ. வழங்கியது, பிரான்ஸ் 1050 M டொ. வழங்கியது. இந்தியா 800 M டொ. வழங்கியது. இவ்வங்கி ஆரம்பத்தில் 10,000Mடொ. அங்கத்துவப்பணமாகவழங்கியது மூலதனம் செலுத்த தயாராகவுள்ள எந்த நாடுகளும் அங்கத்துவ நாடாக சேர்ந்து கொள்ளலாம். குறிப்பிட்ட நாடுகள் வங்கி விதியை பின்பற்ற வேண்டும் அல்லது நீக்கப்படும் வங்கியில் இருந்து விலகுவதற்கு வங்கிவிதி இடம்கொடுக்கின்றது.

வங்கி பின்வரும் அடிப்படையில் கடன் வழங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 வங்கியினது அங்கத்துவப் பணத்தின் பெரும்பகுதி கடனாக வழங்கப்படும்.

2 கடன் வழங்குவதற்கான மூலதனத்தை தனது உண்டியல்கள், பத்திரங்களை சர்வதேச பொதுச்சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெற்று கடன் வழங்குகிறது.

3. உலக வங்கிக்கு வருகின்ற இலாபங்களையும் கடன்களாக வழங்குகின்றது.

உலக வங்கியைப்பொறுத்தவரை குறைவிருத்தி நாடுகளுக்கு அதிகளவு கடன்களை வழங்கவில்லை. இதற்கு வளர்ச்சியடைந்த நாடுகள் உலகவங்கியில் அதிகளவு செல்வாக்கு பெறுவது காரணியாக அமைகிறது. எனவே குறைவிருத்தி நாடுகள் உலக வங்கியை மறுசீரமைக்க வேண்டும் எனவும் அதனுடைய குறைபாடுகளை நீக்க வேண்டுமெனவும் கருத்துகளை தெரிவித்து வருகின்றன.

3. சர்வதேச நாணயநிதி
(I. M. F)

சர்வதேசநாணயநிதிக்கு 1944-ம்ஆண்டு 28 நாடுகளுடைய அங்கீகாரத்துடன் ''பிரிட்டன் வூட்ஸ்'' உடன்படிக்கையின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டது. 1946-ம் ஆண்டிலிருந்தே இது தொழிற்பட ஆரம்பித்தது. இன்று ஏறத்தாழ 132 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. இச்சர்வதேச நாணயநிதி தளம்பும் நாணயமாற்று வீதத்தினை நீக்கி ஒரு உறுதியான நாணயமாற்று வீதத்தினைப் பேணுவதற்காகவும், சர்வதேச வர்த்தகத்தில் ஒழுங்குபாட்டை ஏற்படுத்துவதற்காகவும் அமைக்கப்பட்டது. சர்வதேச நாணயநிதி மிக முக்கியமான நோக்கங்களாக, ஒரு உறுதியான உத்தியோக பூர்வமான நாணயமாற்று வீதத்தைப் பேண வேண்டும் என்பதோடு ஒரு சர்வதேச வர்த்தக ஒழுங்குபாட்டை ஏற்படுத்திக் கொள்வதுமாகும்.

சர்வதேச நாணயநிதி அங்கத்துவநாடுகளிடமிருந்து அங்கத்துவப்பணத்தைப்பெறுகின்றது. மிகக் கூடுதலான அங்கத்துவப் பணத்தை வழங்கிய நாடு ஐக்கிய அமெரிக்காவாகும் இதுஏறத்தாழ 2,750 Mடொ. நிதியாக வழங்கியது. பிரித்தானியா 1,300 M டொ. நிதியாக வழங்கியது. இவ்வாறு சர்வதேச நாணய நிதியில் அங்கத்துவ நாடுகள் அதிகளவு பணத்தைச் செலுத்தி வந்தது. இவ் இரண்டு நாடுகளும் ஏறத்தாழ 45 வீதமான நிதியினை வழங்கின. அங்கத்துவ நாடுகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது ஒவ்வொரு M டொ. க்கு 10வாக்குகள் வழங்கப்பட்டன. இந்த அடிப்படையில் ஐக்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஏராளமான வாக்குகளைக்கொண்டிருந்தன.

மேற்கூறப்பட்ட அமைப்பு வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சாதகமாக அமைகின்றன. ஆனால் வளர்ச்சி குறைந்த நாடுகளும் இதன்மூலம் நன்மை அடைகின்றன. இன்று ஏறத்தாழ 132 நாடுகள் அங்கத்துவம் வகித்த போதிலும் அதிகளவான நாடுகள் குறைவிருத்தி நாடுகளாகக்காணப்பட்டன. சர்வதேச நாணயநிதியில் கடன் பெறவேண்டுமாயின் தொடர்ச்சியான சென்மதிநிலுவைப் பிரச்சினையை அனுபவிக்க வேண்டும். சர்வதேச நாணயநிதியில் அங்கத்துவம் பெறும் நாடுகள் யாவும் சர்வதேச நாணயநிதியால் கட்டுப்படுத்தப்பட்டன. அங்கத்துவ நாடுகள் உறுதியான நாணய வீதத்தைப் பேணுவதற்கும், ஒழுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் உறுதியளிக்கப்பட்டன. இதன் நோக்கங்கள்:-

(1) இந்நாணயநிதி அங்கத்துவ நாடுகளுக்கு சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கடன் வழங்குகிறது

(2) அங்கத்துவ நாடுகளுடைய உள்நாட்டு பொருளாதார வளங்களைப் பயன்படுத்துவதற்கு நிதி உதவியை வளங்கி பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கின்றது.

(3) உறுதியான உத்தியோக பூர்வமான நாணய மாற்று வீதத்தைப்பேணுதல்,

(4) நாடுகளிடையே சமத்துவமான வர்த்தக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்.

(5) சர்வதேச நாணயநிதியினால் உருவாக்கப்பட்ட உறுதியான நாணயமாற்று வீதத்தை அங்கத்துவ நாடுகள் பின்பற்றச் செய்வதோடு அவற்றை மேற்பார்வை செய்தல்,

சர்வதேச நாணயநிதிக்கு அங்கத்துவ நாடுகளே நிதியினை வழங்கின. ஆரம்பத்தில் அங்கத்துவ நாடுகள் நிதிவழங்கும்போது 25 வீதத்தை பவுனாக அல்லது டொலராக வழங்கவேண்டும். ஆனால் 1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தின் பின்னர் முழுநிதியினைச்சொந்த நாட்டு நாணயத்தில் வழங்கலாம்.

சர்வதேசநாணய நிதியில் அங்கத்துவம் பெறும்நாடுகள்நிலையான நா. மா. வீதத்தை பேணவேண்டும் நாணயமாற்று வீதத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தமுடியாது. நாணய மதிப்பிறக்கம் செய்யவேண்டுமாயின் நாணயநிதிக்கு இதுபற்றி அறிவிக்க வேண்டும். மதிப்பிறக்கத்தை நாணய நிதி அங்கீகரிக்கவேண்டும். இது நாடுகளின் சுதந்திரத்திற்கு தடையாக இருந்தது. 1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சீர் திருத்தத்தின் பின் நாடுகள் தாம் நினைத்த நாணய மாற்று வீதங்களை பின்பற்றிக் கொள்ளலாம்

இன்று சர்வதேச நாணய நிதியில் விசேட எடுப்புரிமை பொதுவான நாணயமாக பயன்படுத்தப்படுவதினால் இன்று தங்கம், செல்வாக்கு குறைந்ததாக காணப்படுவதோடு சர்வதேச நாணயநிதியில் இருப்பாக இருக்கின்ற தங்கம் விற்பனை செய்யப்படுகின்றது. இதனை தங்க இருப்பை நாணய நிதிகுறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது என குறிப்பிடலாம்.

சர்வதேச நாணய நிதியில் இன்னும் வாக்குரிமை தொடர்ந்து காணப்படுகின்றது. இவ் வாக்குரிமை பெரும்பாலும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு சாதகமாக இருக்கின்றன. எனவே இவ்வாக்குரிமையை நீக்கவேண்டும் என்று குறைவிருத்தி நாடுகள் கேட்டுவருகின்றன, மேலும் விசேட எடுப்புரிமை முன்வழங்கப்பட்ட அங்கத்துவ தொகையின் அடிப்படையில் பங்கிடுவதனால் குறைவிருத்தி நாடுகளுக்கு தேவையான அளவு பொது நாணயம் கிடைப்பதில்லை. இவ்வாறு அங்கத்துவ தொகையின் அடிப்படையில் விசேட எடுப்புரிமை நாணயம் பங்கிடப்படுவதையும் நீக்கவேண்டும், என குறைவிருத்தி நாடுகள் கேட்டுக்கொள்கின்றன குறைவிருத்தி நாட்டைப் பொறுத்தவரை இவை இரண்டும் இதன் குறைபாடாக தெரிவிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒபெக் நாடுகள்
(OPEC)

ஒபெக் நாடுகள் என்பது பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு எனக்குறிப்பிடப்படும். இக்குழுவில் ஏறத்தாழ 15 நாடுகள் அங்கம் பெறுகின்றன. இதில் கூடுதலாக மத்தியகிழக்கு நாடுகளே அங்கத்துவம் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதில் மிகவும் செல்வாக்குப் பெற்ற நாடாக சவுதிஅரேபியாவை குறிப்பிடலாம். இவ்வமைப்பு 1962-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது 1970-ம் ஆண்டு வரை அதிகளவு முக்கியத்துவம் பெறவில்லை 1970-ம் ஆண்டின் பிற்பகுதியிலே உலக அரங்கில் அதிக முக்கியத்துவம் பெற்ற நிறுவனமாகத் தொழிற்படலாயிற்று.

இந்நாடுகளுடைய நோக்கம் சர்வதேச அரங்கில் பெற்றோலியத்திற்கான விலைமட்ட உறுதியைப் பேணுவதோடு சர்வதேச பொருளியல் அரங்கில் பெற்றோலியத்திற்கான நிரம்பல் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதாகும் இவ்விரு நோக்கத்தை மையமாகக் கொண்டே தொழிற்பட்டு வருகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் ஏற்கனவே தமக்கிடையில்பொருளியல் ஒழுங்குபாட்டை ஏற்படுத்திக் கொண்ட காரணத்தினால் விலை உறுதிப்பாட்டைப் பேணி பொருளாதார வளர்ச்சி அடைந்தன. எனவே ஒபெக் நாடுகளும் பொருளாதார வளர்ச்சி அடைந்து கொள்ளலாம் என்பதை நோக்கமாகக் கொண்டு விலை உறுதிப்பாட்டைப் பேணிக் கொள்கின்றன.

70ம் ஆண்டின் பின் உலக பொருளியல் அரங்கை மாற்றக் கூடியவகையில் விலை மட்ட உயர்வுகள் ஏற்பட்டு பணவீக்கம் சென்மதி நிலுவைப் பிரச்சனைகள் வாழ்க்கைச்செலவு மட்ட உயர்வு போன்றபொருளியல் தாக்கங்களை ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது. இவ்விலை ஏற்றம் வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகள்என்பவற்றை பாதிப்புக்குள்ளாக்கின்றது. ஒபேக் நாடுகள் எண்ணை விலையேற்றத்தினால் அதிகளவான வருமானத்தை பெற்று வருகின்றன. எனினும் அவற்றை எவ்வாறு முதலீடு செய்வது என்பது ஒபெக் நாடுகள் இன்று எதிர் நோக்குகின்ற பிரச்சினையாகும்.

ஒபெக் நாடுகள் இன்று தமது வருமானத்தின் ஒரு பகுதியினை வளர்சியடைந்த நாடுகளுடைய பொருளாதார முதலீட்டுக்காக வழங்குகின்றன. மேலும் வருமானத்தின் ஒரு பகுதியை தமது நாடுகளுடைய பொருளாதார வளர்ச்சிக்காக முதலீடு செய்கின்றன. தமது வருமானத்தின் ஒரு பகுதியை சர்வதேச நிதி நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கி, அரேபிய வங்கி, போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கி வருகின்றன. மேலும் குறைவிருத்தி நாடுகளுக்கு மிகக்கூடுதலான நிதியுதவி வழங்கி வருகின்றன. குறைவிருத்தி நாடுகளுக்கு 78 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 16000 M டொலரை நிதி உதவியாக வழங்கியுள்ளன.

இந்நாடுகளது வருமான அளவு அதிகரிக்கின்ற போதிலும் ஏனைய வளங்களின் பற்றாக்குறையானது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம்

இலகுவழி ஆங்கிலம்

சி. இரத்தினம் *B. A., Sp. Eng. Trd.*

இக்கட்டுரை ஆசிரியர் 15 வருடங்களுக்கு மேலாக உயர்தர வகுப்புகளில் ஆங்கிலம் கற்பித்த அனுபவம் உடையவர். தமிழ்மூலம் கல்விகற்கும் மாணவர்க்கும் உயர்கல்வி கற்கும் மாணவர்க்கும் இலகுவழியில், இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு நவீனமொழி நூல் அறிஞர்களின் கொள்கைகளைக்கற்பித்தல் வேண்டுமென்ற அவரது பொதுநல நோக்கின் விளைவே இலகுவழி ஆங்கிலம் ஆகும். வணிகத்தில் இவரது ஆக்கம் தொடர்ச்சியாக இடம் பெறுமென அறிவிப்பதில் "வணிகம்" மகிழ்வெய்கின்றது.

ஆ - ர்

ஆங்கில மொழி *English Language*

ஆங்கிலம் ஓர் உலக மொழி. இம்மொழியை ஏறக்குறைய 300 கோடி மக்கள் பேசுகின்றார்கள். ஒருகாலத்தில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய சின்னமாகக் கருதப்பட்ட இம் மொழி இன்று இன, மொழி அரசியல் வேற்றுமைகளுக்கு இடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்தும் கருவியாகவும் உலக அறிவுச் செல்வங்கள் அத்தனையையும் தரக் கூடிய சக்தியாகவும் திகழ்கிறது.

உலக அரங்கில் சிறப்பிடம் பெற்றுள்ள இம் மொழியின் இலக்கண அமைப்பு மிக இலகுவானதும் வளைந்து நெகிழ்ந்துகொடுக்கும் தன்மை வாய்ந்ததுமாகும். இலக்கண விதியை மீறி I am here since two hours என்றோ Him killed she என்றோ கேட்பவரால் கருத்தைப் புரிந்து கொள்ளமுடியும். இதனாற்றான் ஆங்கிலம் மிகப் பிழையாகப் பேசுவதற்கு வெகு இலகுவான மொழி என்ற விமர்சனம் எழுந்தது. இம்மொழியைச் சரியாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இலக்கண அறிவு தேவை. இத்தேவையைப் பூர்த்தி செய்வதே இக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

ஆங்கில மொழி இலக்கணத்தை

(1) சொல்லின் எழுத்துமுறை (Spelling)
(2) சொல் (Word)
(3) பெயர்ச் சொல் (Noun)
(4 பிரதிப் பெயர்ச் சொல் (Pronoun)
(5) பெயருரிச் சொல்லும் தீர்மானிக்கும் சொல்லும் (Adjectives & Determiners)
(6) வினைச்சொல் (Verb)
(7) வினை உரிகள் (Adverbials)
(8) சொற்றொடர் வினைகள் (Phrasal verbs)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9) சொற்றொடர்கள் (Phrases)
(10) முன்னிடைச் சொல் (Preposition)
(11) வினச் சொற்கள் (Question Words)
(12) இணைப்பிடைச் சொல் (Conjunctions)

என வகுத்துக் கற்றல் மிக இலகுவான வழியாகும்.

1.0. சொல்லின் எழுத்து முறை (Spelling)

ஆங்கிலம் 26 எழுத்துக்களையும் 46 ஒலியன்களையுமுடைய மொழியாகும். குறைந்த அளவிலான எழுத்துக்கள் கூடிய அளவிலான ஒலிகளை உண்டாக்க வேண்டியிருப்பதால் இவ்வெழுத்துக்கள் பல்வேறு வகையாக உபயோகப்படுத்தப்படுவதைக் காணலாம். பலஎழுத்துக்கள் சொற்களில் ஒலிக்கப்படுவதில்லை. சில சொற்கள் ஒலிக்கப்படுவது போல் எழுதப்படுவதில்லை இவை ஆங்கில எழுத்திலக்கணத்தின் பிரதான குறைபாடுகளாகும், பகுத்தறிவுக்கோ அல்லது அளவையியலுக்கோ உட்படாது செயற்படும் இம் மொழியின் சொல்லின் எழுத்து முறையைக் கற்பதற்கு சில விசேட முறைகளைக் கையாள வேண்டியுள்ளது. இம் முறைகளை மொழி நூலறிஞர்கள் மூன்றாக வகுத்துள்ளார்கள். அவையாவன

1. சிறப்பு விதிகளை அறிந்து கற்றல் (Spelling by rules)

2. ஒத்த ஓசையுடைய சொற்களைத் தெரிந்து கற்றல் (Spelling words that sound alike)

3. உருவ அமைப்பை அவதானித்துக் கற்றல் (spelling words that are similar in appearance)

1 1. சிறப்புவிதிகளை அறிந்துகற்றல் Spelling by rules

(1) ay, ey, oy, ful ஆகியவற்றை ஈற்றில் கொண்டிருக்கும் சொற்கள் பன்மை காட்ட s பெறும்.

(உ-ம்) day - days, money - moneys, toy - toys, teaspoonful - teaspoonfuls.

(2) sh, ch, s, x, y, z ஆகியவற்றை ஈற்றில் கொண்டிருக்கும் சொற்கள் பன்மை காட்ட es பெறும்.

(உ-ம்) dish - dishes, branch - branches, bus - buses, box – boxes, fez - fezes.

(3) yக்கு முன் (a) மெய்யெழுத்து வரின் y, i ஆகமாறி es பெற்று பன்மை காட்டும்.

(உ-ம்) party - parties, copy - copies, library - libraries, history - historyes.

(b) உயிரெழுத்துவரின் y மாறாது s பெற்று பன்மை காட்டும்.

(உ-ம்) boy - boys, key - keys, toy - toys, guy – guys.

(மிகுதி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக்கு ஒரு சந்தர்ப்பம்!

G. C. E. (A/L) August 82

பரீட்சைக்கு வரக்கூடிய நடைமுறை விடயங்களை
உள்ளடக்கிய

விசேட வினு விடை வகுப்பு

பாடம்: வணிகமும் நிதியும்

காலம்: ஏப்ரல் 22 - யூலை 24

நேரம்: செவ்வாய், வியாழன் 4-45 — 5-45 p. m.

அனுமதி:-

அனுமதிக்கட்டணம்: ரூபா 10/- அனுமதிக்கான விண்ணப்பம் நேரிலும், தபால் மூலமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முக்கிய குறிப்பு:-

அனுமதி பெற்றவர்களுக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ வினு விடை வகுப்புக்கான விடயத்தொகுப்பு வழங்கப்படும். கற்கைக் கட்டணம் செலுத்திய பின்னரே வகுப்பினுள் அனுமதிக்கப்படுவர்.

தொடர்பு முகவரி:-

கே. ஜீ'ஸ். இன்ஸ்ரிரியூட்

37, (351) மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி அருகாமை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகம்

VANIHAM மாதசஞ்சிகை

கலை — வர்த்தகம்

பரபரப்பாக விற்பனையாகின்றது!

வணிகமும் நிதியும்

வினா — விடை

G. C. E. A/L August மாணவர்க்கான விசேட வெளியீடு

இல. 1 விலை ரூபா: 4 50

முக்கிய கவனத்திற்கு:- ஜூலை 82 வரை மாதம் ஒன்றாக இன்னும் நான்கு வினா விடைகள் வெளிவரும்.

வினாவிடை 1ஐ தபால்மூலம் பெறவிரும்புவோர் ரூபா 5/-க்கு தபாற்கட்டளை அனுப்புக. V.P.P. கிடையாது.

வெளியீடு:-
''வணிகம்''
மாணவர் சஞ்சிகை
வெளியீட்டு திருவகம்.

தொடர்பு முகவரி:-
Editor
"VANIHAM"
113, Point Pedro Road.
Nallur - Jaffna.

யாழ். நாவலர் வீதியிலுள்ள தயா அச்சகத்தில் கே. ஜீ'ஸ். இன்ஸ்ரிரியூட் சார்பில் அதன் உரிமையாளர் கு. குணசிங்கம் என்பவரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org